க.து.ந.க.எண்.பி3/3884/2008
ஆணையர் அவர்களின் 14.11.2008 நாளிட்ட குறிப்பு

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :601/2008 பொருள் எண் .1

### பழைய கட்டடத்தை இடிப்பதற்கு அனுமதி

வார்டு எண் : 34 மண்டலம் : 3

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | மண்டலம் –3, பகுதி– 7, வார்டு – 34ல், நட்டால் தோட்டம் சென்னை மாநகராட்சி ஆரம்ப பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள பழுதடைந்த பயன்படாத நிலையில் உள்ள கல்நார் கூரை வேயப்பட்ட கட்டடங்களை இடித்துவிட்டு சுற்றுச்சுவர் கட்டும் பணி. |
| இடிக்கப்படவேண்டிய கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சுமார் 40 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாகும். |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 2427 சதுர அடி |
| இடிக்கப்படவேண்டிய கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.6,087/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்து பயன்படாத நிலையில் உள்ளது. இவ்விடத்தில் வார்டு–34 அலுவலகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை..../ மண்டலம் | கட்டடத்துறை |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.689/2008 நாள் : 30.10.2008 |

எனவே, மேற்கண்ட பணியிடத்தில் பழுதடைந்து பயன்படாத நிலையில் உள்ள கட்டடங்களை இடிப்பதற்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 323 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.3.ந.க.எண்.பி1/8674/2008**
**ஆணையர் அவர்களின் 29.09.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :602/2008 பொருள் எண். 2

**பொதுக் கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு எண்–38 | மண்டலம்–3 |
|---|---|---|
| 01 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சாஸ்திரி நகர் குளக்கரை சாலை மற்றும் சந்திரயோகி சமாதி சாலை சந்திப்பிலுள்ள பழுதடைந்துள்ள பொதுக் கழிப்பிட கட்டிடம் |
| 02 | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி, பணித்துறை, 1982ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 03 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.34,000/– |
| 04 | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. |
| 05 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 500 சதுர அடிகள் |
| 06 | திட்ட முன் மொழிவு | நகர நல வாழ்வு மையம் கட்டும் பணி |
| 07 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள். | வார்டு குழு தீர்மான எண்.268, நாள்.28.04.2008 |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த பொதுக் கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “07.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 64 /2008 நாள் 07.11.2008– ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

> “17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 310 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.பி5/2923/2008
ஆணையர் அவர்களின் 03.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :603/2008 பொருள் எண்.3

மதிப்பீடு

வார்டு எண்.68 மண்டலம்–5

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மண்டலம்–5, வார்டு–68ல், புல்லா அவின்யூ செனாய் நகரில் ஏற்கனவே உள்ள குழந்தைகள் நல மையத்தில் (24X7 EOC) கூடுதலாக புறநோயாளி பிரிவு கட்டடம் மற்றும் உள்நோயாளி பிரிவிற்கு ரேம்ப் (Ramp) மின் தூக்கி வசதியுடன் கூடிய மின் தூக்கி அறை மற்றும் அபிவிருத்தி பணி. |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை..../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத் தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.124.00 இலட்சங்கள் |
| விலைப்பட்டி ஆண்டு | 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி–கட்டடத்துறை 2008–2009 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.39 நாள்:22.10.2008 |

எனவே, மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,24,00,000/–க்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“07.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 063 /2008 நாள் 07.11.2008– ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது .”

“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.309 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.287/08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

க.து.ந.க.எண்.பி8/2855/2008

ஆணையர் அவர்களின் 14.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :604/2008 பொருள் எண்.4

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண். 120 மண்டலம் எண்.8

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை - மண்டலம் - 8, வார்டு – 120ல், வடபழனி சுகாதார மையத்தில் பழுதடைந்துள்ள மருத்துவ அலுவலர் அறை, சிதைந்த நிலையிலுள்ள மருந்தகம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடங்களை இடித்துவிட்டு அவ்விடத்தில் 24x7 EOC கட்டடத்திற்கு அபிவிருத்தி பணி மற்றும் புதியதாக புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் காத்திருக்கும் அறை, கூடுதல் மாடிப்படி அறை, மருந்தக அறை, கழிவறை மற்றும் குழந்தைகள் குளியல் அறை கட்டடம் கட்டும் பணி. |
| பணி மேற்கொள்ளவிருக்கும் துறை/மண்டலம் | கட்டடத்துறை. |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் | ரூ.1,50,00,000/- |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்ற தீர்மான எண்.455/2008<br>நாள் :27.08.2008 |
| விலைப்பட்டி ஆண்டு | 2008-2009 |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2008-2009 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர்கள்.<br>ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,28,89,824.39 | ரூ.1,80,37,121.00 | (+)39.93% அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட நாள்<br>14.10.2008 மற்றும் 24.10.2008 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | ரூ.1,50,66,569.00 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள;ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | ரூ.1,50,66,569.00 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | (+)16.89% அதிகம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2008-2009 |

<u>க.து.ந.க.எண்.பி8/2855/2008</u>

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 19.09.2008 அன்று ஒற்றை ஒப்பம் திருவாளர்கள்.ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடமிருந்து பெறப்பட்டது. இதில் ஒற்றை ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,80,37,121.00 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் விலை விவரப்படி அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.1,28,89,824.39யை விட (+)39.93% அதிகமாகும். எனவே, ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுடன் 24.10.2008 அன்று நடத்திய இரண்டாம் முறை பேச்சுவார்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,50,66,569.00 ஆகும். இது 2008–09ஆம் ஆண்டின் விலைவிவரப்படி அலுவலக பணி மதிப்பீட்டு தொகையான ரூ.1,28,89,824.39யைவிட (+)16.89% அதிகமாகும். மற்றும் ஒப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கழிவுத்தொகை ரூ.1000/–க்கு பதிலாக ரூ.8,500/– சென்னை மாநகராட்சிக்கு செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் தன்னுடைய 14.10.2008 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட பணி செய்ய வேண்டிய இடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடம் என்பதால் கட்டுமான பொருட்கள் சாலையோரத்தில் வைக்க இயலாமல் அவ்வப்போது ஆட்களை கொண்டு பணியிடத்திற்கு எடுத்து செல்ல வேண்டியுள்ளதால் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதாலும் மற்றும் இப்பணியிடத்தின் அருகாமையில் குடிசைப்பகுதி அமைந்துள்ளதால் கட்டுமான பொருட்கள் திருடுப்போக வாய்ப்புள்ளதால் கூடுதல் பாதுகாப்பு ஆட்கள் பணியமர்த்த வேண்டியுள்ளதால் கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் மற்றும் 24.10.2008 நாளிட்ட கடிதத்தில் கட்டுமான பொருட்களின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றது என்பதனை கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தைக்குபின் தான் குறிப்பிட்டுள்ள விலை புள்ளிகள் மேலும் குறைக்க இயலாது என்று தெரிவித்துள்ளார். மேலும் நடப்பு சந்தை விலைகளுடன் (The Hindu Property Plus dated 18.10.2008) ஒப்பிடுகையில் இவரது ஒப்பவிழுக்காடு (+)1.12% அதிகமாகும்.

மேற்கண்ட இடிக்கப்படவுள்ள பழைய கட்டிடங்களின் மொத்த பரப்பளவு 269.10 சதுர மீட்டர் (2897 சதுர அடிகள்) ஆகும் இவைகள் சுமார் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டவையாகும். இதன் தற்போதைய அலுவலக புத்தக மதிப்பு ரூ,3.50 இலட்சங்கள் ஆகும்.

மேற்கண்ட திட்டப்பணிக்காக 2008–09ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி திட்ட மதிப்பீடு ரூ.150.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக அனுமதிபெற மன்றத்தின் அனுமதி தீர்மானம் எண்.455/2008, நாள்.27.08.2008 ன் மூலம் பெறப்பட்டுள்ளது. இதற்கிடையில் தமிழ் நாடு அரசின் சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் அரசு வெளியிட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி இத்திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியே போதுமானது. மேலும் இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒற்றை ஒப்பம் 11.11.2008 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு (Tender Committee) முன் சமர்ப்பிக்கப்பட்டு இதற்கு பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீ ஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் <u>ரூ.1,50,66,569.00</u> (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து ஐந்நூற்று அறுபத்தொன்பது மட்டும்)க்கான அதாவது 2008-2009 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)<u>16.89</u>% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை அவர்களுக்கு அளிக்க அனுமதியும் மற்றும்
2. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீஹேமா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் தன் ஒப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள கழிவுத்தொகை ரூ.1,000/-க்கு பதிலாக ரூ.8,500/-(ரூபாய் எட்டாயிரத்து ஐந்நூறு மட்டும்)ஐ சென்னை மாநகராட்சிக்கு செலுத்த தெரிவித்ததை ஏற்கவும் (அலுவலக மதிப்பீட்டின்படி கழிவுத்தொகை ரூ.8,450/- ஆகும்.)

3. மேற்கண்ட திட்டப்பணிக்கு 2008–09ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.150.00 இலட்சங்களுக்கு அனுமதியும்

4. மேற்கண்ட பணியிடத்தில் அமைந்துள்ள பழுதடைந்த மருத்துவ அலுவலர் அறை சிதைந்த நிலையில் உள்ள மருந்தகம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடங்களை இடிக்க அனுமதியும் மற்றும்

5. மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி ஒப்பங்கள் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 322 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.290/08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(தி.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.அ.3.ந.க.எண்.பி2/8101/2008
ஆணையர் அவர்களின் 10.09.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :605/2008 பொருள் எண்.5

**சாலை விரிவாக்கம் செய்ய நிலம் கையகப்படுத்துதல்**

வார்டு எண்.37 மண்டலம்–3

| | |
|---|---|
| சாலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டிய இடம் | டாங்க் பண்ட் சாலையிலிருந்து மாதவரம் நெடுஞ்சாலையின் இடதுபுறம் வாகன போக்குவரத்து வசதிக்காக சாலை விரிவாக்கம் செய்தல் |
| கையகப்படுத்தப்பட வேண்டிய இடத்தின் பரப்பளவு மற்றும் புல எண். | பெரம்பூர் கிராமம், பிளாக் எண்.22, சர்வே எண்.362/1ல் 1095 சதுர அடி நிலத்தை ராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி சாரிட்டி பள்ளி நிர்வாகத்திடமிருந்து கையகப்படுத்தப்பட வேண்டி உள்ளது. |
| திட்ட முன்மொழிதல் | சாலை குறுகலாக இருப்பதால் வாகன போக்குவரத்து வசதிக்காக விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது |
| வார்டு குழு தீர்மானம் (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.555, நாள் :28.08.2008 |

எனவே, டாங்க் பண்ட் சாலையிலிருந்து மாதவரம் நெடுஞ்சாலையின் இடதுபுறம் சாலை விரிவாக்கம் 1095 சதுர அடி நிலத்தை ராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி சாரிட்டி பள்ளி நிர்வாகத்திடமிருந்து கையகப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 314 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.284 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3609/2008**
**ஆணையர் அவர்களின் 21.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :606/2008 பொருள் எண்.6

**திறந்த வெளி நிலம்**

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க முன் வந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை புலத்தணிக்கைச் செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில் மண்டலம்–1, வார்டு எண்.7ல், தண்டையார்பேட்டை கிராமம், புல எண்.3940/1 பகுதியில் உள்ள, 5630 ச.மீ பரப்பளவு கொண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு 1வது மண்டல வார்டுகுழு தீர்மானம் எண்.67/2008, நாள் 14.07.2008–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–1, வார்டு குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.279 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நிமஉது.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/3272/2008</u>
<u>ஆணையர் அவர்களின் 17.10.2008 நாளிட்டக் குறிப்பு</u>

**<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :607/2008 பொருள் எண்.7

**<u>திறந்தவெளி நிலம்</u>**

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க முன் வந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக்கொண்ட திறந்தவெளி நிலங்களை புலத்தணிக்கைச் செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து, ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொது மக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு அனைத்து மண்டல அலுவலர்களிடமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில் மண்டலம்–6, வார்டு எண்.82–ல் அண்ணா சாலை (ரஉேறஜா டவர்ஸ்)–ல் திருவல்லிக்கேணி கிராமம், புல எண்.279/1, 6, 8, 9, 281/1, 5, 282/2, 3, 4, 7 மற்றும் 8ல் உள்ள 1379.71 ச.மீ பரப்பளவு கொண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து எடுத்துக்கொள்வதற்கு 6–வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.222, நாள் 29.07.2008–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–6 வார்டு குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட திறந்தவெளி நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி எடுத்துக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வமநி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.278 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நிமஉது.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.10.ந.க.எண்.சி1/7456/2008.**
**ஆணையாளரின் 12.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :608/2008 பொருள் எண்.8

**திறந்த வெளி நிலமெடுத்தல்**

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டட வரைபட அனுமதிகள் வழங்கும் போது கட்டட உரிமையாளர்களிடமிருந்து சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நேரடியாக எடுத்துக்கொண்ட திறந்த வெளி நிலங்களை உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க முன்வந்துள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இவ்வாறு நேரடியாக எடுத்துக் கொண்ட திறந்தவெளி நிலங்களை புலத்தணிக்கைச் செய்து பரப்பளவு விவரங்கள் சரிபார்த்து ஆக்கிரமிப்பு விவரத்தினையும் கண்டறிந்து இந்நிலங்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் விதத்தில் இருக்கும் பட்சத்தில் இந்நிலங்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக வார்டு குழுக்களின் பரிந்துரைகளை பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில் 10வது மண்டல வார்டு குழு தீர்மானம் எண்.696 மற்றும் 697, நாள் 18.09.2008ல் பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | இடம் | கிராமம் | புல எண். | பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| 1 | 145 / 10 | நயினார் சாலை | மைலாப்பூர் | 1736 – பிளாக் எண்.37 | 1093.00 சதுர மீட்டர் |
| 2 | 150 / 10 | சாந்தோம் நெடுஞ்சாலை | பட்டினப்பாக்கம் | 4291/1<br>4294/3<br>4294/4<br>4294/5<br>4294/6 | 322.60 சதுர மீட்டர் |

எனவே, மண்டலம்–10 வார்டு குழு பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள மேற்காணும் இடங்களிலுள்ள திறந்த வெளி நிலங்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.14/2008, நாள்: 17.11.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.“

“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.295/08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/371/2008

ஆணையர் அவர்களின் 14.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :609/2008 பொருள் எண். 9

**கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம்அமைக்கும் பணி நில ஆர்ஜிதம் செய்வதற்கு அரசின் மானியம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டுதல்**

சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, கீழ்கண்ட போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளான தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் பணிகளுக்கு போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள்.

TNUIFSL மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination committee) ஆகியோர் கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் முகேஷ் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தீர்மான எண்.641/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1. மேற்கண்ட சாலை சந்திப்புகளில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகளை மேற்க்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியார் நியமனம் செய்யபட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் தமிழ்நாடு நிலஆர்ஜித சட்டம் 1984ன் படியாகவும் அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிலத்தின் மீதான மேம்பாட்டு உரிமை மாற்றம்(Transfer of Develoment Rights) மூலமாகவோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அனுமதியும் இதற்கான நிதி உதவியை அரசிடம் கோருவதற்கு அனுமதியும்,
3. பெறப்படும் வடிவமைப்பின் படி இப்பணிக்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள அனுமதியும், பெறப்பட்டுள்ளது.

கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் முகேஷ் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர். கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

1. கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நிலஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.61,70,00,000/–க்கு அனுமதியும்,
2. அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் இப்பணிக்கு ஒப்பங்கள் கோர அனுமதியும்,
3. சேவைத்துறையினர் கோரிய முன்பணத்தினை வழங்க அனுமதியும்,
4. இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுதவும் மன்ற தீர்மான எண்.151/2008, நாள். 03.05.2008 மூலம் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன்படி கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல் மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நில ஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டுத்தொகையான ரூ.61,70,00,000/– அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டி 16.05.2008 நாளிட்ட கடிதம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்முறைப்படுத்த 52 கிரவுண்டு பரப்பளவு நிலங்கள் தேவைப்படுகிறது. இந்நிலங்களை கையகப்படுத்த மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவினத்தை மேற்கொள்ள ஏதுவாக இத்திட்டத்திற்கான மதிப்பீட்டில் ரூ.16,00,00,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை புதிய முறையான TDR (Transfer of Development Rights)ஐ செயல்படுத்தி பணியினை நடைமுறைப்படுத்த கால அவகாசம் அதிகமாகலாம். ஆனால் பணியிடத்தில் உள்ள நிலத்தடிநீர்க்குழாய்களை மாற்றுவதற்கான நிலம் உடனடித்தேவையென்பதால் நிலம் கையகப்படுத்துவதற்கான தொகையான ரூ.16,00,00,000/–ஐ அரசிடம் மான்யமாகக் கோரி பெற 10.07.2008 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இந்த இழப்பீட்டுத் தொகை அரசிடம் மான்யமாக கோர மன்றத்தீர்மானம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையால் 2006 –2007 மற்றும் 2007 – 2008ம் ஆண்டுகளில் இதுவரை அரசு மான்யம் ஏதும் பெறப்படவில்லை

அரசு கடிதத்தில் சென்னை மாநகராட்சி நிதி நிலைமை மற்றும் மான்யம் கோருதல் சம்பந்தமாக மன்றத்தீர்மானம் நிறைவேற்றி ஒப்புதல் பெற்று அரசிற்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி அரசின் கடிதத்திற்கிணங்க சென்னை மாநகராட்சியில் வரிவசூல் மற்றும் இதர வரவினங்களின் மூலமாக பெறப்படும் தொகையானது, மாநகராட்சியின் அன்றாட வரவு மற்றும் மூலதன பணிகளுக்குண்டான பட்டியல்களை தீர்வு செய்வதற்கும் மாதாந்திர ஊதியம் மற்றும் ஓய்வூதியங்கள் அளிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

கணேசபுரம் மேம்பாலம் அமைப்பதற்கு ஏதுவாக நிலம் கையகப்படுத்த தேவைப்படும் தோராய தொகையான ரூ.16 கோடியை மாநகராட்சியின் சொந்த நிதியில் இருந்து மேற்கொள்ளும்பட்சத்தில் மாநகராட்சியின் அன்றாட செலவினங்களை மேற்கொள்வதில் நிதிச்சுமை ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, சென்னை மாநகர மக்களின் நன்மையினை கருதியும் கணேசபுரம் சுரங்கப்பாதையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மழைக்காலங்களில் ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டும் மேற்படி தொகையான ரூ.16 கோடியை தமிழக அரசு மான்யமாக வழங்கும்பட்சத்தில் இத்திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்திட இயலும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி இத்திட்டம் குறித்து ஒட்டு மொத்தமாக நில ஆர்ஜிதத்தொகையினையும் சேர்த்து மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது. தற்போது அரசுக் கடிதத்தில் கோரியுள்ளபடி கீழ்க்கண்டவற்றிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சியின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு நிலம் கையகப்படுத்துவதற்கான இழப்பீட்டுத் தொகையை அரசிடம் மான்யமாக கோர மன்ற ஒப்புதலும்,
2. மேற்படி தொகையான ரூ.16,00,00,000/–ஐ (ரூபாய் பதினாறு கோடி மட்டும்) அரசிடம் மான்யமாக கோர அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 2 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 324 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.293/08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பா.து.ந.க.எண்.பி3/900/2007
ஆணையர் அவர்களின் 14.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :610/2008 பொருள் எண்.10

எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நில ஆர்ஜிதம் செய்வதற்கு அரசின் மானியம் கோர மன்றத்தின் அனுமதி வேண்டுதல்

நெடுஞ்சாலை துறையால் சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த சாலை சந்திப்புகளில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டு, போக்குவரத்து நெரிசல் மிகுந்த எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு, வரைபடப் பணிகளை மேற்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியவர் திருவாளர்கள் வில்பர் ஸிமித் அசோசியேட்ஸ்அவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. இதனிடையில் எல்.பி.சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலிருந்து சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டது.

TNUIFSL மற்றும் ஒருங்கிணைப்புக்குழு (Co-ordination committee) ஆகியோர் கலந்துக்கொண்ட கலந்தாய்வு கூட்டத்தில் எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றம் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு திருவாளர்கள் வில்பர் ஸிமித் அசோசியேட்ஸ் அவர்களால் பெறப்பட் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வரைபடத்தின்படி பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் நில ஆர்ஜிதம் செய்ய பூர்வாங்க பணிகள் மற்றும் பெறப்படும் வடிவமைப்பின்படி மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தீர்மான எண்.640/2007, நாள்.29.12.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1. மேற்கண்ட சாலை சந்திப்புகளில் போக்குவரத்து ஆய்வு மற்றும் வடிவமைப்பு பணிகளை மேற்க்கொள்ள TNUIFSL மூலமாக கலந்தறிதற்குரியார் நியமனம் செய்யபட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. பணியினை மேற்கொள்ள ஏதுவாக மேற்கண்ட சாலை சந்திப்புகளில் தமிழ்நாடு நிலஆர்ஜித சட்டம் 1984ன் படியாகவும் அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வெளியிட்டுள்ள பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிலத்தின் மீதான மேம்பாட்டு உரிமை மாற்றம் (Transfer of Develoment Rights) மூலமாகவோ நில ஆர்ஜிதம் செய்வதற்கான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அனுமதியும் இதற்கான நிதி உதவியை அரசிடம் கோருவதற்கு அனுமதியும்,
3. பெறப்படும் வடிவமைப்பின் படி இப்பணிக்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள அனுமதியும், பெறப்பட்டுள்ளது.

கலந்தறிதற்குரியரான திருவாளர்கள் வில்பர் ஸிமித் அசோசியட்ஸ் அவர்கள் மேற்கண்ட பணிக்கான வடிவமைப்பு, வரைபடம் மற்றும் மதிப்பீடு அளித்துள்ளனர். கலந்தறிதற்குரியவர் அளித்த வடிவமைப்பை சரிபார்க்கும் பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, தற்போது பி.இ.எம்.எஸ் நிறுவனம் மூலமாக சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

1. எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் தயாரிக்கப்பட்ட நிலஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.126,40,00,000/– க்கு அனுமதியும்,
2. அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கிடைக்கப்பெற்றபின் இப்பணிக்கு ஒப்பங்கள் கோர அனுமதியும்,
3. சேவைத்துறையினர் கோரிய முன்பணத்தினை வழங்க அனுமதியும்,
4. இத்தோராய மதிப்பீட்டு தொகைக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு கோரி அரசுக்கு கடிதம் எழுதவும் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன்படி எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட நில ஆர்ஜிதம் உள்ளிட்ட தோராய மதிப்பீட்டுத்தொகையான ரூ.126,40,00,000/– அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டி 26.05.2008 நாளிட்ட கடிதம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்முறைப்படுத்த 52 கிரவுண்டு பரப்பளவு நிலங்கள் தேவைப்படுகிறது. இந்நிலங்களை கையகப்படுத்த மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போதைய அரசுவிலைக்கேற்ப கையகப்படுத்தும் நிலங்களுக்கான செலவீனமாக ரூ.73,00,00,000/– ஆகும் என தெரிவிக்கப்பட்டது. இதற்கான செலவினத்தை மேற்கொள்ள ஏதுவாக இத்திட்டத்திற்கான மதிப்பீட்டில்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை புதிய முறையான TDR (Transfer of Development Rights)ஐ செயல்படுத்தி பணியினை நடைமுறைப்படுத்த கால அவகாசம் அதிகமாகலாம். ஆனால் பணியிடத்தில் உள்ள நிலத்தடிநீர்க்குழாய்களை மாற்றுவதற்கான நிலம் உடனடித்தேவையென்பதால் நிலம் கையகப்படுத்துவதற்கான தொகையான ரூ.73,00,00,000/–ஐ அரசிடம் மான்யமாகக் கோரி பெற 05.08.2008 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் இந்த இழப்பீட்டுத் தொகை அரசிடம் மான்யமாக கோர மன்றத்தீர்மானம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் சென்னை மாநகராட்சி பாலங்கள் துறையால் 2006 –2007 மற்றும் 2007 – 2008ம் ஆண்டுகளில் இதுவரை அரசு மான்யம் ஏதும் பெறப்படவில்லை

அரசு கடிதத்தில் சென்னை மாநகராட்சி நிதி நிலைமை மற்றும் மான்யம் கோருதல் சம்பந்தமாக மன்றத்தீர்மானம் நிறைவேற்றி ஒப்புதல் பெற்று அரசிற்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி அரசின் கடிதத்திற்கிணங்க சென்னை மாநகராட்சியில் வரிவசூல் மற்றும் இதர வரவினங்களின் மூலமாக பெறப்படும் தொகையானது, மாநகராட்சியின் அன்றாட வரவு மற்றும் மூலதன பணிகளுக்குண்டான பட்டியல்களை தீர்வு செய்வதற்கும் மாதாந்திர ஊதியம் மற்றும் ஓய்வூதியங்கள் அளிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைப்பதற்கு ஏதுவாக நிலம் கையகப்படுத்த தேவைப்படும் தோராய தொகையான ரூ.73.00 கோடியை மாநகராட்சியின் சொந்த நிதியில் இருந்து மேற்கொள்ளும்பட்சத்தில் மாநகராட்சியின் அன்றாட செலவினங்களை மேற்கொள்வதில் நிதிச்சுமை ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, சென்னை மாநகர மக்களின் நன்மையினை கருதியும் எல்.பி.சாலை – திருவள்ளுவர் சாலை சந்திப்பில் மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணி ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டும் மழைக்காலங்களில் ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டும் மேற்படி தொகையான ரூ.73.00 கோடியை தமிழக அரசு மான்யமாக வழங்கும்பட்சத்தில் இத்திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்திட இயலும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்படி இத்திட்டம் குறித்து ஒட்டு மொத்தமாக நில ஆர்ஜிதத்தொகையினையும் சேர்த்து மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது. தற்போது அரசுக் கடிதத்தில் கோரியுள்ளபடி கீழ்க்கண்டவற்றிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சியின் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு நிலம் கையகப்படுத்துவதற்கான இழப்பீட்டுத் தொகையை அரசிடம் மான்யமாக கோர மன்ற ஒப்புதலும்,
2. மேற்படி தொகையான ரூ.73,00,00,000/–ஐ (ரூபாய் ஏழுபத்து மூன்று கோடி மட்டும்) அரசிடம் மான்யமாக கோர அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 2 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 325 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.292/08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :611/2008 பொருள் எண்.11

**பயனற்ற ஆய்வு வாகனங்கள் விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியில் ஆய்வு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட 10 எண்ணிக்கை இலகுரக ஆய்வு வாகனங்கள் உள்ளது உள்ளபடி நிலையில் ஒப்பம் – ஏலம் கோரி விற்பனை செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டது 8.4.2008 ஏலம் நாளன்று 7 ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்கண்ட 6 வாகனங்கள் வாங்குவதற்கு ஏலத்தில் குறைந்த விலை கோரி இருப்பதால் மறுத்துவிட்டு பின்னடைந்த ஏலதாரருக்கு ஒப்ப வைப்புத் தொகையை திரும்ப அளிக்கவும் மேலும் 4 வாகனங்கள் வாங்குவதற்கு யாரும் விலை கோரவில்லை என்பதாலும் மறு ஒப்பம்–ஏலம் கோரவும் அதில் 2 வாகனங்கள் மாநகர போக்குவரத்து (சென்னை) கழக உபயோகத்திற்கு தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பிற்கு குறையாமல் விற்பனை செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். தொகுப்பு எண். | வாகன பதிவு எண். | | வகை | தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பு (ரூ.) | கோரிய உயர்ந்த விலை ரூ. | உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | டி சி இசட் | 9134 | மகேந்திரா ஜீப் | 32,700/– | 30,400/– | திரு. எச். ஆருண் ரஷீத் |
| 2. | டி சி இசட் | 9136 | மகேந்திரா ஜீப் | 29,900/– | 25,700/– | மெஸர்ஸ் ஏ.ஆர்.டிரேடர்ஸ் |
| 3. | டி சி இசட் | 4636 | மகேந்திரா ஜீப் | 30,100/– | 30,300/– | திரு. எம். ரகு |
| 4. | டி சி இசட் | 9186 | மகேந்திரா ஜீப் | 33,800/– | 30,600/– | திரு. பி. கருப்பசாமி |
| 5. | டி எஸ் சி | 1212 | அம்பாஸிடர் கார் | 30,300/– | விலை கோரவில்லை | |
| 6. | டி எஸ் ஒ | 2706 | அம்பாஸிடர் கார் | 26,800/– | விலை கோரவில்லை | |
| 7. | டி எஸ் ஒ | 2707 | அம்பாஸிடர் கார் | 23,100/– | விலை கோரவில்லை | |
| 8. | டி எண். 09 ஜி | 0115 | டிராக்ஸ் ஜீப் | 28,400/– | விலை கோரவில்லை | |
| 9. | டி சி இசட் | 9179 | மகேந்திரா ஜீப் | 29,800/– | 28,600/– | திரு. எம். ரகு |
| 10. | டி சி இசட் | 9187 | மகேந்திரா ஜீப் | 30,600/– | 28,500/– | திரு. எம். ரகு |
| | | | மொத்தம் | ரூ. 2,95,200/– | 1,74,100/– (6 எண்ணிக்கை மட்டும்) | |

எனவே

1. பதிவு எண். டி.சி.இசட் 9134, 9136, 9179 மற்றும் டி.சி.இசட் 9187 (மகேந்திரா ஜீப்) ஆகிய
நான்கு பயனற்ற வாகனங்களுக்கும் வாங்குவதற்கு ஏலத்தில் தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பிற்கு குறைவான விலை கோரி இருப்பதால் மறுத்துவிட்டு மறு ஒப்பம்–ஏலம் கோரவும், ஒப்ப வைப்புத் தொகையினை திரும்ப அளிக்கவும் ;

2. பதிவு எண். டிஎஸ்சி 1212, டிஎஸ்ஒ 2706, 2707 (அம்பாஸிடர் கார்) மற்றும் டிஎன்09 ஜி 0115 (ட்ராக்ஸ் ஜீப்) போன்ற நான்கு பயனற்ற வாகனங்களை வாங்குவதற்கு ஏலத்தில் யாரும் விலை கோரவில்லை என்பதால் மறு ஒப்பம்–ஏலம் கோரவும் ;

3. பதிவு எண். டி சி இசட் 4636, டி சி இசட் 9186 (மகேந்திரா ஜீப்) ஆகிய இரண்டு பயனற்ற வாகனங்கள் வாங்குவதற்கு முறையே ரூ.30,300/– ரூ.33,800/– ஆக மொத்தம் ரூ.64,100/– (தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பிற்கு குறையாமல்) மற்றும் விற்பனை வரி 12.5% (ரூ.8012.50) மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துச்சீட்டின் மூலம் 19.8.2008 அன்று செலுத்திவிட்டதால் மாநகர போக்குவரத்து கழகம் (சென்னை)க்கு பதிவு புத்தகத்துடன் விற்பனை செய்யவும்

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 315 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :612/2008 பொருள் எண்.12

### பயனற்ற வாகனங்கள் – கழிவு செய்து விற்பனை செய்தல்

சென்னை மாநகராட்சியில் துப்புரவு மற்றும் இதர பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட 36 கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் பயனற்றது என கழிவு செய்து விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பு நிர்ணயம் செய்ய துணை ஆணையாளர் (பணிகள்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 22–7–2008 அன்று நேரடி ஆய்வு செய்து ஒவ்வொரு வாகனத்திற்கும் மதிப்பு நிர்ணயித்து ஒப்பம்–ஏலம் கோரி விற்பனை செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. 24.9.2008 ஒப்பந்தப்புள்ளி பெறும் இறுதி நாளன்று ஒருவர் மட்டும் விலைப்புள்ளி அளித்துள்ளார். 25.9.2008 ஏலம் நாளன்று 50 ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்கண்ட வாகனங்களை வாங்குவதற்கு ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை (மொத்தம் ரூ.38,77,300/–)யானது தொழில்நுட்பக்குழு நிர்ணயித்த (மொத்தம் ரூ.9,47,780/–) மதிப்பைவிட அதிகமாக இருப்பதால் ஏலதாரர்களுக்கு விற்பனை செய்ய பின்வருவனவற்றின் மீது அனுமதி வேண்டப்பகிறது.

எனவே,

1. மத்திய லாரி நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள கீழ்கண்ட 36 கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் பழுதுபார்த்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் கழிவு செய்யவும் மற்றும் விற்பனை செய்யும் பொருட்டு தொழில்நுட்பக்குழு அங்கத்தினர்களால் ஒவ்வொரு வாகனத்தையும் ஆய்வு செய்து நிர்ணயித்த மதிப்பிற்கும் அதிகமாக ஏலத்தில் வாங்குவதற்கு கோரிய (மொத்த ரூ.38,77,300/–) விலைக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும் ;

| வ. எண். தொகுப்பு எண். | வாகன பதிவு எண். | வகை | தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பு (ரூ.) | கோரிய உயர்ந்த விலை ரூ. | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1. | டிஎன்04 ஏ 0575 | லேலாண்ட் | 33,600/– | 1,25,000/– | திரு. எம். பக்ருதீன் |
| 2. | டிஎன்04 ஏ 0134 | லேலாண்ட் | 23,600/– | 1,51,000/– | திரு. வி. தனபால் |
| 3. | டிஎன்04 பீ 3530 | லேலாண்ட் | 37,100/– | 1,54,000/– | திரு. எஸ். சீனிவாசன் |
| 4. | டிஎன்04 பீ 3528 | லேலாண்ட் | 23,600/– | 1,31,000/– | ஸ்ரீ அங்கு ஆட்டோ ஸ்பேர்ஸ் |
| 5. | டிஎன்04 பீ 4423 | லேலாண்ட் | 32,600/– | 1,41,500/– | திரு. ஜி. சண்முகவேல் |
| 6. | டிஎன்04 பீ 4442 | லேலாண்ட் | 37,600/– | 1,67,000/– | திரு.டி.கே. பாலகிருஷ்ணன் |
| 7. | டிஎன்04 பீ 4059 | லேலாண்ட் | 40,600/– | 1,64,500/– | திரு. ஜி. சண்முகவேல் |
| 8. | டிஎன்04 பீ 3633 | லேலாண்ட் | 32,600/– | 1,41,000/– | திரு. வி. தனபால் |
| 9. | டிஎன்04 பீ 2916 | லேலாண்ட் | 32,600/– | 1,50,000/– | திரு. எம். பஷீர் அகமத் |
| 10. | டிஎன்04 பீ 4166 | லேலாண்ட் | 32,600/– | 1,56,500/– | திரு. ஜி. சண்முகவேல் |
| 11. | டிஎன்04 பீ 3626 | லேலாண்ட் | 37,600/– | 1,59,500/– | மெஸர்ஸ் ஜெமினி டிரேடர்ஸ் |
| 12. | டிஎன்04 பீ 4439 | லேலாண்ட் | 42,100/– | 1,55,000/– | திரு. டிகே.பாலகிருஷ்ணன் |
| 13. | டிஎன்04 பீ 4441 | லேலாண்ட் | 35,600/– | 1,55,000/– | திரு. டிகே.பாலகிருஷ்ணன் |
| 14. | டிஎன்04 சி 0038 | லேலாண்ட் | 35,100/– | 1,58,500/– | திரு. கே. எம். சுப்புராஜ் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | டிஎன்04 சி 0031 | லேலாண்ட் | 30,600/– | 1,65,000/– | திரு. சி. ஜெகதீஸ்வரன் |
| 16. | டிஎன்04 இ 3491 | லேலாண்ட் | 43,200/– | 1,69,000/– | திரு. வி. தனபால் |
| 17. | டிஎன்04 இ 3497 | லேலாண்ட் | 32,100/– | 1,32,000/– | திரு. வி. தனபால் |
| 18. | டிஎன்04 ஏ 0191 | டாடா பென்ஞ் | 42 600/– | 1,38,000/– | திரு. டிகேபாலகிருஷ்ணன் |
| 19. | டிஎன்04 ஏ 0201 | டாடா பென்ஞ் | 28,200/– | 1,35,000/– | திரு. டிகேபாலகிருஷ்ணன் |
| 20. | டிஎன்04 9773 | டாடா பென்ஞ் | 23,600/– | 1,13,000/– | திரு. எம். பஷீர் அகமத் |
| 21. | டிஎன்04 பீ 6058 | டாடா 608 | 15,860/– | 80,000/– | திரு. ஆர். ஜி. ராமராஜ் |
| 22. | டிஎன்04 பீ 7833 | டாடா 608 | 13,860/– | 82,000/– | திரு. சி. ஜெகதீஸ்வரன் |
| 23. | டிஎன்04 பீ 8227 | டாடா 608 | 13,860/– | 72,000/– | திரு. ஆர். ஜி. ராமராஜ் |
| 24. | டிஎன்04 பீ 6250 | டாடா 608 | 19,860/– | 70,000/– | திரு. ஆர். ஜி. ராமராஜ் |
| 25. | டிஎன்04 சி 4147 | டாடா 608 | 13,860/– | 75,000/– | திரு. சி. ஜெகதீஸ்வரன் |
| 26. | டிஎன்04 இ 2976 | சுவராஜ் மஸ்தா | 22,000/– | 82,000/– | திரு. டீ. மதன் குமார் |
| 27. | டிஎன்04 இ 3135 | சுவராஜ் மஸ்தா | 23,260/– | 71,000/– | திரு. கே. எம். சுப்புராஜ் |
| 28. | டிஎன்04 இ 2581 | சுவராஜ் மஸ்தா | 20,060/– | 70,000/– | திரு. வி. தனபால் |
| 29. | டிஎன்04 இ 4023 | சுவராஜ் மஸ்தா | 23,860/– | 64,000/– | திரு. வி. தனபால் |
| 30. | டிஎன்04 ஜி 0048 | மகேந்திரா வேன் | 11,360/– | 52,000/– | திரு. பி. கருப்பசாமி |
| 31. | டிஎன்09 ஜி 0116 | ட்ராக்ஸ் ஜீப் | 11,360/– | 32,000/– | ஸ்ரீ மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் |
| 32. | டிஎன்04 சி 7340 | டாடா 207 | 22,400/– | 41,000/– | திரு. கே. ராமசாமி |
| 33. | டிஎன்04 சி 6950 | டாடா 207 | 22,400/– | 34,500/– | திரு. டீ. ஜெகதீசன் |
| 34. | டிஎன்04 பீ 0003 | அம்பாஸிடர் கார் | 11,360/– | 25,000/– | திரு. எம். பக்ருதீன் |
| 35. | டிஎன்01 எம் 0001 | அம்பாஸிடர் கார் | 11,360/– | 25,000/– | திரு. எம். பக்ருதீன் |
| 36. | டிஎன்04 ஜி 0040 | மகேந்திரா ஜீப் | 13,860/– | 40,300/– | திரு. எம். பஷீர் அகமத் |
| | | மொத்தம் ரூ. | 9,47,780/– | 38,77,300/– | |

2. மேற்கண்ட 36 கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்தையும் விற்பனை செய்யும் பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகையை (20%) சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகையுடன் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு) தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்றபின்னர் கொண்டு செல்லவும்.

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 316 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண்.எம்1/5978/2008.
15.11.2008 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :613/2008 பொருள் எண்: 13

**40 எண்ணிக்கைகளில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் வடசென்னைக்கு கொள்முதல் செய்தல்**

சென்னை நகரில், தற்சமயம், திறந்த டிப்பர் லாரிகள் மற்றும் இலகுரக வாகனங்கள் மூலம், குப்பை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. MSWM விதிகளின்படி திறந்த வாகனங்களில் குப்பை எடுத்துச் செல்லக்கூடாது என்பதின்படி, 14 கனமீட்டர் திறன் கொண்ட 77 எண்ணிக்கைகளில் மூடிய காம்பேக்டர்கள் கொள்முதல் செய்யப்படும் நிலையில் தெருக்களில் அள்ளப்படும் குப்பைகளை, குப்பை மாற்று நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் திறந்த நிலை டிப்பர் வாகனங்களுக்கு மாற்றாக, படிப்படியாக செயல்முறையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. தற்போது 70 எண்ணிக்கைகளில் இவ்வகை வாகனங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இவ்வகை பெரிய காம்பேக்டர்கள் பேருந்து சாலை மற்றும் பெரிய தெருக்களில் பணி செய்ய ஏதுவாகும். ஆனால், இக்காம்பேக்டர்கள் பெரிய அளவில் இருப்பதால், சிறிய தெருக்கள், சந்துகள் மற்றும் குடிசை பகுதிகளில் ஈடுபடுத்த முடியாத நிலை உள்ளது. ஆகவே, சென்னை மாநகராட்சியில் 10 வருடங்களுக்கு மேலாக ஓடிக் கொண்டிருக்கும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அல்லது 2.5 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியுள்ள இலகுரக வாகனங்களை பின்னர் கழிவு செய்யும் பொருட்டு , இலகுரக சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட சிறிய காம்பேக்டர்களின் மூலம் குப்பை அகற்றலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 6 கனமீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் கொள்முதல் செய்வதற்கான குறிப்பு, திடக்கழிவு மேலாண்மை துறை மேற்பார்வை பொறியாளரிடமிருந்து பெறப்பட்டது.

14 கனமீட்டர் திறன்கொண்ட காம்பேக்டர்களின் பணி செய்யும் விதம் திருப்தியாக இருப்பதால், 6 கன.மீ திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் இயக்குதல் அல்லாமல் பராமரிப்புடன் மட்டும் கூடி கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில், பயன்படுத்தப்பட முடியாத இலகுரக வாகனங்கள் கழிவு செய்யப்பட்டப் பின் அதன் ஓட்டுநர்களையே இவ்வகை காம்பேக்டர்களை இயக்க ஈடுபடுத்தப்படுவர். மேலும், இவ்வகை காம்பேக்டர்களின் பராமரிப்பிற்கான தொழில் நுணுக்கம் அறிந்த எவரும் சென்னை மாநகராட்சியில் இல்லாததனால், தனியார் நிறுவனங்களை பராமரிப்பில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி பரிசோதனை அடிப்படையில், ஒரு எண்ணிக்கையில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட காம்பெக்டர், திருவாளர்கள் உஷா என்ஜினியரிங் அவர்களிடமிருந்து கொள் முதல் செய்யப்பட்டு ஒன்றரை மாதங்களாக நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

முதற் கட்டமாக 6 கனமீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட 40 காம்பெக்டர்கள் நான்கு வருட பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய, 28.8.2008 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தங்களின்படி திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இரண்டாம் கட்டமாக வடசென்னைக்கு 40 எண்ணிக்கைகளும், தென் சென்னைக்கு 45 எண்ணிக்கைகளும், 6 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட காம்பெக்டர்கள் 4 வருட பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய பார்வை 1 முதல் 3 வரை குறிப்பிட்டுள்ளபடி, ஒளிவு மறைவில்லா திறந்த நிலை ஒப்பங்கள் 24.10.2008 ஐ ஒப்பத்திறப்பு நாளாக கொண்டு கோரப்பட்டன. அரசு அறிவித்த ஆணைகளின்படி, ஒப்ப அறிவிப்புடன் கூடிய ஒப்பப்பத்திரங்கள் மூலம், கணினியிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளும் வகையில் கணிணியில் ஏற்றம் செய்யப்பட்டன.

இதன்படி, 40 எண்ணிக்கைகளில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட காம்பெக்டர்கள் தென் சென்னைக்கு கொள்முதல் செய்வதற்கான ஒப்பங்கள் 24.10.2008 அன்று திறக்கப்பட்டன. இதில் 1. திருவாளர்கள். காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், மற்றும் 2. திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன. இவ்வொப்பங்களை சீராய்வு செய்து தகுதி வாய்ந்த இரு ஒப்பதாரர்களின் விலை விவர உறைகளும் 24.10.2008 அன்றே பிரிக்கப்பட்டன. அவர்கள் குறிப்பிட்ட விலை விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**இ.பொ.து.வ.செ.ப.ந.க.எண்.எம்1/5978/2008.**

| Sl. No. | Particulars of 6 cu.m compactor. | Quoted by M/s Antony Motors Ltd., Rs. | **Quoted by M/s Kam Avida Enviro Engrs.P.Ltd. Rs.** |
|---|---|---|---|
| 1. | Chassis Plus Cabin Including Transportation, Transit Insurance and all other Taxes. | 7,99,000.25 (Ashok Leyland Ecomet 1112/36 Chassis) | **7,75,000.00 (Eicher 11.10 Chassis)** |
| 2. | Compactor (6Cu.m) Equipment Including Transportation, Transit Insurance and all other Taxes. | 8,04,375.00 | **7,02,500.00** |
| 3. | Total for 1 no. (Chassis + Equipment) | 16,03,375.25 | **14,77,500.00** |
| 4. | Total for 40 nos. Chassis + Equipment) | 6,41,35,010.00 | **5,91,00,000,00** |
| 5. | Maint cost/day/per vehicle for 4 years | 4,19,767.50 | **3,72,300.00** |
| 5. | Total Maint. cost For 40 vehicles for 4 yrs. | 1,67,90.700.00 | **1,48,92,000.00** |
| 6. | Grand Total (Chassis + Equipment + Maint. cost For 40 vehicles) for 4yrs | 8,09,25,010.00 | **7,39,92,000.00** |

The Maintenance costs quoted by the two eligible bidders are as follows:

| | M/s.Antony Motors | | M/s.Kam Avida | |
|---|---|---|---|---|
| Description | Cost per day per vehicle Rs. | Cost for 40 nos. for 4 years Rs. | Cost per day per vehicle Rs. | Cost for 40 nos. for 4 years Rs. |
| I Year | FREE | FREE | FREE | FREE |
| II Year | 330.00 | 48,18,000.00 | 290.00 | 42,34,000.00 |
| III Year | 370.00 | 54,02,000.00 | 330.00 | 48,18,000.00 |
| IV Year | 450.00 | 65,70,000.00 | 400.00 | 58,40,000.00 |



ஒரு எண்ணிக்கையில் **6** கன.மீ. திறன்கொண்ட காம்பேக்டர் கொள்முதல் செய்ய, ஏற்கனவே கோரிய ஒப்பங்களில் விலை விவரங்கள், கீழே ஒப்பு நோக்குதலுக்காக பட்டியலிடப்பட்டுள்ளன.

| Remarks | Tenderer M/s | Chassis Rs. | Equipment Rs. | Total Rs. | Maintenance for 4 years Rs. | Grand Total Rs. |
|---|---|---|---|---|---|---|
| First call 13.06.08 for 1 no | Usha Engg | 8,08,901 (Eicher chassis) | 8,17,440 | 16,26,341 | 3,92,375 | 20,18,716 |
| Second call 05/09/08 for 40 nos. | Antony Motors | 8,15,000 (TATA chassis) | 7,69,500 | 15,84,500 | 3,83,250 | 19,67,750 |
| Present call 24/10/08 for 40nos. | M/s.Kam Avida | 7,75,000 (Eicher 11.10 Chassis | 7,02,500 | 14,77,500 | 3,72,300 | 18,49,800 |

மேலே பட்டியலிடப்பட்ட தொகைகளின்படி, **40** ண்ணிக்கைகளில் **6** கன.மீ. கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் தயாரித்து வழங்க மற்றும் **4** வருடங்களுக்கான பராமரிப்புத் தொகையையும் சேர்த்து ரூ.**7,39,92,000.00/–** என குறைந்த விலையாக திருவாளர்கள். காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் குறிப்பிட்டு இருந்தது.

அதாவது Eicher11.10 மாடல் சேசிஸ் மற்றும் கேபின் ஒன்றின் விலையாக ரூ.7,75,000/– ம், மற்றும் **6** கன.மீ. காம்பேக்டர் உபகரணம் ஒன்றின் விலையாக ரூ.7,02,500/–ம் சேர்த்து மொத்த விலையாக ஒன்றின் விலை ரூ.14,77,500/– என குறிப்பிட்டிருந்தனர். இதன்படி **40** எண்ணிக்கைகளின் விலை ரூ. **5,91,000.00** ஆகும். மேலும் பராமரிப்பு தொகையாக (முதல் வருடம் இலவச பராமரிப்பு தொகையை தவிர்த்து) ரூ. **290/–** ஐ இரண்டாம் வருடத்திற்கும்,

ரூ. 330/– ஐ மூன்றாம் வருடத்திற்கும், ரூ. 400/– ஐ நான்காம் வருடத்திற்கும், குறிப்பிட்டிருந்தனர். இதன்படி 45 எண்ணிக்கைகளுக்கான காம்பேக்டர்களின் பராமரிப்புத் தொகை ரூ. 1,48.92.000/- திருவாளர்கள். காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் விலைக்குறைப்பிற்கான பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில், அவர்கள் 11/11/08 என்ற தேதியிட்ட கடிதம் மூலம் தாங்கல் குறிப்பிட்டிருந்த விலையே மிகவும் குறைவு என்றும், தங்களால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் தெரிவித்து இருந்தனர்.

ஒப்பக் குழுவின் (Tender Committee) பரிந்துரைக்காக இக்கோப்பு 11.11.2008 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் முந்தைய ஒப்பத்தில் குறிப்பிட்டிருந்த காம்பெக்டர் ஒன்றில் விலைக்கான ரூ.15,84,500/–ஐ விட இவ்வொப்பத்தின் இறுதி தொகையான ரூ.14,77,500/– ஆனது ரூ.1,07,000/– குறைவு என்பதாலும், பராமரிப்பு தொகையில் இவ்வொப்பத்தில் ஒவ்வொரு வருடத்திற்கும் நாள் ஒன்றுக்கு ரூ.10,/– முந்தைய ஒப்பத்தைவிட குறைவு என்பதாலும், ஒப்பக் குழுவால் இவ்வொப்பம் பரிந்துரை செய்யப்பட்டது.

மேலும், இவ்வொப்பதாரரே தென் சென்னை மற்றும் வடசென்னை கொள்முதல் செய்யப்படும் காம்பெக்டருக்கான (40 மற்றும் 45) ஒப்பத்தில் குறைந்த விலை ஒப்பதாரராக இருப்பதால் ஒரே சமயம் அவரால் குறித்த நேரத்தில் 40 மற்றும் 45 காம்பெக்டர்களை வழங்க முடியுமா என்ற ஐயம் ஒப்பக்குழு அங்கத்தினர்களால் எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்து திருவாளர்க.ள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், தனது 12.11.2008 தேதியிட்ட கடித மூலம், தங்களின் நிதி மற்றும் தொழில் நுட்ப துறைகளின் திறன் தற்சமயம் மேம்படுத்தப்பட்டுள்ளதால், தங்களால் கண்டிப்பாக குறித்த நேரத்தில் அனைத்து காம்பெக்டர்களையும், வழங்க முடியும் என தெரிவித்துள்ளனர். ஆகவே, மேற்கூறியவற்றை கருத்தில் கொண்டு இவ்வொப்பத்தை பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகனப்பதிவு, காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறுவதற்கான செலவினை, ஒப்பதாரர் அளிக்கும் தக்க செலவு சீட்டுகளை ஏற்று, அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிப்பதாக ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 40 எண்ணிக்கைகளில் 6 கன.மீ. கொள்ளளவு திறன்கொண்ட காம்பேக்டர், கேபின் மற்றும் Eicher கம்பெனி சேசிஸ் கொள்முதல் செய்ய ஆகும் மொத்த செலவான ரூ. 5,91,00,000/– ஐ திடக்கழிவு மேலாண்மைத் துறை மூலமாக JNNURM தொகையிலிருந்து வழங்கவும்; நான்கு வருடங்களுக்கான பராமரிப்பு செலவுத்தொகை (முதலாமாண்டு பராமரிப்பு செலவைத் தவிர்த்து) யான ரூ. 1,48,92,000/– ஐ, இயந்திர பொறியியல் துறையின் வடசென்னை மற்றும் தென்சென்னை வாகன பணிமனையின் கணக்கு எண்.209, இலகுரக வாகன பராமரிப்பு நிதி எனும் தலைப்பின் கீழ் வழங்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.

1. 40எண்ணிக்கைகளில் 6 கன.மீ கொள்ளளவு திறன்கொண்ட Eicher 11.10 சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட சிறிய காம்பெக்டர் உபகரணங்கள் மற்றும் 4 வருடங்களுக்கு ஆகும் பராமரிப்பு தொகையையும் சேர்த்து மொத்த தொகை ரூ.7,39,92,000/-க்கான திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அதற்கான பணி ஆணை வழங்கவும்,

2. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகைக்கான வங்கி உத்தரவாதம் பெற்று உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

3. 40எண்ணிக்கைகளில் 6 கன.மீ. கொள்ளளவு திறன்கொண்ட காம்பேக்டர்களின் கொள்முதல் தொகையான ரூ.5,91,00,000/– JNNURM மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

4. 4 வருடத்திற்கான பராமரிப்பு (முதலாமாண்டு பராமரிப்பு செலவைத் தவிர்த்து) தொகையான ரூ. 1,48,92,000/– ஐ இயந்திர பொறியியல் துறையின் வடசென்னை மற்றும் தென் சென்னை வாகன பணிமனையின் கணக்கு எண் 209, இலகுரக வாகன பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கவும்,

5. சேஸிஸ் தொகையின் 70 சதவிகிதத்தை ஒப்பதாரர் திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் சேசஸிஸ் உற்பத்தியாளரிடமிருந்து பெறப்பட்ட பொருள் விவர விலைப்பட்டியல் (Invoice) சமர்ப்பிக்கப்பட்டவுடன் ஒப்ப விதிகளின்படி முன்பணமாக வழங்கவும்,

6. மீதமுள்ள 30 சதவிகித சேஸிஸ் தொகை மற்றும் காம்பெக்டர்களுக்கான முழுத் தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 90 சதவிகிதம், வாகனம் கொள்முதல் செய்து ஆணையர் அவர்களின் பேரில் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கவும்,

7. காம்பெக்டர் உபகரணங்கள் பொருத்திய வாகனங்களின் திருப்திகரமான செயல்பாட்டைப் பொறுத்து, மீதமுள்ள காம்பெக்டர் உபகரணங்கள் பொருத்திய வாகனங்களுக்கான முழுத்தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 10 சதவிகிதம், வாகனம் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் வழங்கவும்,

8. இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகன பதிவு , காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறவதற்கான செலவினை தக்க செலவு சீட்டுகள் ஒப்பதாரர் திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அதனை ஏற்று அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிக்கவும்
( Actuals on production of necessary challans ),

மேற்கண்ட 1 முதல் 8 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 319/08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.285 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

இ.பொ.து.தெ.செ.ப.ந.க.எண்.எம்1/5979/2008.
15.11.2008 நாளிட்ட ஆணையர் அவர்களின் குறிப்பு.

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :614/2008 பொருள் எண்: 14

**45 எண்ணிக்கைகளில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் தென் சென்னைக்கு கொள்முதல் செய்தல்**

சென்னை நகரில், தற்சமயம், திறந்த டிப்பர் லாரிகள் மற்றும் இலகுரக வாகனங்கள் மூலம், குப்பை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. MSWM விதிகளின்படி திறந்த வாகனங்களில் குப்பை எடுத்துச் செல்லக்கூடாது என்பதின்படி, 14 கனமீட்டர் திறன் கொண்ட 77 எண்ணிக்கைகளில் மூடிய காம்பேக்டர்கள் கொள்முதல் செய்யப்படும் நிலையில் தெருக்களில் அள்ளப்படும் குப்பைகளை, குப்பை மாற்று நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் திறந்த நிலை டிப்பர் வாகனங்களுக்கு மாற்றாக, படிப்படியாக செயல்முறையில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. தற்போது 70 எண்ணிக்கைகளில் இவ்வகை வாகனங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இவ்வகை பெரிய காம்பேக்டர்கள் பேருந்து சாலை மற்றும் பெரிய தெருக்களில் பணி செய்ய ஏதுவாகும். ஆனால், இக்காம்பேக்டர்கள் பெரிய அளவில் இருப்பதால், சிறிய தெருக்கள், சந்துகள் மற்றும் குடிசை பகுதிகளில் ஈடுபடுத்த முடியாத நிலை உள்ளது. ஆகவே, சென்னை மாநகராட்சியில் 10 வருடங்களுக்கு மேலாக ஓடிக் கொண்டிருக்கும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அல்லது 2.5 இலட்சம் கி.மீ. தூரம் ஓடியுள்ள இலகுரக வாகனங்களை பின்னர் கழிவு செய்யும் பொருட்டு , இலகுரக சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட சிறிய காம்பேக்டர்களின் மூலம் குப்பை அகற்றலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 6 கனமீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் கொள்முதல் செய்வதற்கான குறிப்பு, திடக்கழிவு மேலாண்மை துறை மேற்பார்வை பொறியாளரிடமிருந்து பெறப்பட்டது.

14 கனமீட்டர் திறன்கொண்ட காம்பேக்டர்களின் பணி செய்யும் விதம் திருப்தியாக இருப்பதால், 6 கன.மீ கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் இயக்குதல் அல்லாமல் பராமரிப்புடன் மட்டும் கூடி கொள்முதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில், பயன்படுத்தப்பட முடியாத இலகுரக வாகனங்கள் கழிவு செய்யப்பட்டப் பின் அதன் ஓட்டுநர்களையே இவ்வகை காம்பேக்டர்களை இயக்க ஈடுபடுத்தப்படுவர். மேலும், இவ்வகை காம்பேக்டர்களின் பராமரிப்பிற்கான தொழில் நுணுக்கம் அறிந்த எவரும் சென்னை மாநகராட்சியில் இல்லாததனால், தனியார் நிறுவனங்களை பராமரிப்பில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி பரிசோதனை அடிப்படையில், ஒரு எண்ணிக்கையில் 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட காம்பெக்டர், திருவாளர்கள் உஷா என்ஜினியரிங் அவர்களிடமிருந்து கொள் முதல் செய்யப்பட்டு ஒன்றரை மாதங்களாக நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

முதற் கட்டமாக 6 கனமீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட 40 காம்பெக்டர்கள் நான்கு வருட பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய, 28.8.2008 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தங்களின்படி திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இரண்டாம் கட்டமாக வடசென்னைக்கு 40 எண்ணிக்கைகளும், தென் சென்னைக்கு 45 எண்ணிக்கைகளும், 6 கன மீட்டர் கொள்ளளவு திறன் கொண்ட காம்பெக்டர்கள் 4 வருட பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்ய குறிப்பிட்டுள்ளபடி, ஒளிவு மறைவில்லா திறந்த நிலை ஒப்பங்கள் 24.10.2008 ஐ ஒப்பத்திறப்பு நாளாக கொண்டு கோரப்பட்டன. அரசு அறிவித்த ஆணைகளின்படி, ஒப்ப அறிவிப்புடன் கூடிய ஒப்பப்பத்திரங்கள் மூலம், கணிணியிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து பயன்படுத்திக்கொள்ளும் வகையில் கணிணியில் ஏற்றம் செய்யப்பட்டன.

இதன்படி, 45 எண்ணிக்கைகளில் 6 கன மீட்டர் கொள்ளவு திறன் கொண்ட காம்பெக்டர்கள் தென் சென்னைக்கு கொள்முதல் செய்வதற்கான ஒப்பங்கள் 24.10.2008 அன்று திறக்கப்பட்டன. இதில் 1. திருவாளர்கள். காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், மற்றும் 2. திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பங்கள் பெறப்பட்டன. இவ்வொப்பங்களை சீராய்வு செய்து தகுதி வாய்ந்த இரு ஒப்பதாரர்களின் விலை விவர உறைகளும் 24.10.2008 அன்றே பிரிக்கப்பட்டன. அவர்கள் குறிப்பிட்ட விலை விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**இ.பொ.து.தெ.செ.ப.ந.க.எண்.எம்1/5979/2008.**

| Sl. No. | Particulars of 6 cu.m compactor. | Quoted by M/s Antony Motors Ltd., Rs. | **Quoted by M/s Kam Avida Enviro Engrs.P.Ltd. Rs.** |
|---|---|---|---|
| 1. | Chassis Plus Cabin Including Transportation, Transit Insurance and all other Taxes. | 7,96,000.00 (Tata LPT EX 1112/36 Chassis) | **7,75,000.00 (Eicher 11.10 Chassis)** |
| 2. | Compactor (6Cu.m) Equipment Including Transportation, Transit Insurance and all other Taxes. | 8,04,375.00 | **7,02,500.00** |
| 3. | Total for 1 no. (Chassis + Equipment) | 16,00,375.00 | **14,77,500.00** |
| 4. | Total for 45 nos. Chassis + Equipment) | 7,20,16,875.00 | **6,64,87,500.00** |
| 5. | Maint cost/day/per vehicle for 4 years | 4,19,750.00 | **3,72,300.00** |
| 5. | Total Maint. cost For 45 vehicles for 4 yrs. | 1,88,88.750.00 | **1,67,53,500.00** |
| 6. | Grand Total (Chassis + Equipment + Maint. cost For 45 vehicles) for 4yrs | 9,09,05,625.00 | **8,32,41,000.00** |

The Maintenance costs quoted by the two eligible bidders are as follows:

| | M/s.Antony Motors | | M/s.Kam Avida | |
|---|---|---|---|---|
| Description | Cost per day per vehicle Rs. | Cost for 45 nos. for 4 years Rs. | Cost per day per vehicle Rs. | Cost for 45 nos. for 4 years Rs. |
| I Year | FREE | FREE | FREE | FREE |
| II Year | 330.00 | 54,20,250.00 | 290.00 | 47,63,250.00 |
| III Year | 370.00 | 60,77,250.00 | 330.00 | 54,20,250.00 |
| IV Year | 450.00 | 73,91,250.00 | 400.00 | 65,70,000.00 |



ஒரு எண்ணிக்கையில் **6** கன.மீ. திறன்கொண்ட காம்பேக்டர் கொள்முதல் செய்ய, ஏற்கனவே கோரிய ஒப்பங்களில் விலை விவரங்கள், கீழே ஒப்பு நோக்குதலுக்காக பட்டியலிடப்பட்டுள்ளன.

| Remarks | Tenderer M/s | Chassis Rs. | Equipment Rs. | Total Rs. | Maintenance for 4 years Rs. | Grand Total Rs. |
|---|---|---|---|---|---|---|
| First call 13.06.08 for 1 no | Usha Engg | 8,08,901 (Eicher chassis) | 8,17,440 | 16,26,341 | 3,92,375 | 20,18,716 |
| Second call 05/09/08 for 40 nos. | Antony Motors | 8,15,000 (TATA chassis) | 7,69,500 | 15,84,500 | 3,83,250 | 19,67,750 |
| Present call 24/10/08 for 45 nos. | M/s.Kam Avida | 7,75,000 (Eicher 11.10 Chassis | 7,02,500 | 14,77,500 | 3,72,300 | 18,49,800 |

மேலே பட்டியலிடப்பட்ட தொகைகளின்படி, **45** எண்ணிக்கைகளில் **6** கன.மீ. கொள்ளளவு திறன் கொண்ட சிறிய காம்பேக்டர்கள் தயாரித்து வழங்க மற்றும் **4** வருடங்களுக்கான பராமரிப்புத் தொகையையும் சேர்த்து ரூ.**8,32,41,000.00/–** என குறைந்த விலையாக திருவாளர்கள். காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் குறிப்பிட்டு இருந்தது.

அதாவது Eicher11.10 மாடல் சேசிஸ் மற்றும் கேபின் ஒன்றின் விலையாக ரூ.7,75,000/– ம், மற்றும் 6 கன.மீ. காம்பேக்டர் உபகரணம் ஒன்றின் விலையாக ரூ.7,02,500/–ம் சேர்த்து மொத்த விலையாக ஒன்றின் விலை ரூ.14,77,500/– என குறிப்பிட்டிருந்தனர். இதன்படி 40 எண்ணிக்கைகளின் விலை ரூ. 6,64,87,500.00 ஆகும். மேலும் பராமரிப்பு தொகையாக (முதல் வருடம் இலவச பராமரிப்பு தொகையை தவிர்த்து) ரூ. 290/– ஐ இரண்டாம் வருடத்திற்கும், ரூ. 330/– ஐ மூன்றாம் வருடத்திற்கும், ரூ. 400/– ஐ நான்காம் வருடத்திற்கும், குறிப்பிட்டிருந்தனர். இதன்படி 45 எண்ணிக்கைகளுக்கான காம்பேக்டர்களின் பராமரிப்புத் தொகை ரூ. 1,67,53,500.00/– திருவாளர்கள். காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களிடம் விலைக்குறைப்பிற்கான பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில், அவர்கள் 11/11/08 என்ற தேதியிட்ட கடிதம் மூலம் தாங்கல் குறிப்பிட்டிருந்த விலையே மிகவும் குறைவு என்றும், தங்களால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் தெரிவித்து இருந்தனர்.

ஒப்பக் குழுவின் (Tender Committee) பரிந்துரைக்காக இக்கோப்பு 11.11.2008 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. திருவாளர்கள். அந்தோணி பிரைவேட் லிமிடெட் அவர்கள் முந்தைய ஒப்பத்தில் குறிப்பிட்டிருந்த காம்பெக்டர் ஒன்றில் விலைக்கான ரூ.15,84,500/–ஐ விட இவ்வொப்பத்தின் இறுதி தொகையான ரூ.14,77,500/– ஆனது ரூ.1,07,000/– குறைவு என்பதாலும், பராமரிப்பு தொகையில் இவ்வொப்பத்தில் ஒவ்வொரு வருடத்திற்கும் நாள் ஒன்றுக்கு ரூ.10,/– முந்தைய ஒப்பத்தைவிட குறைவு என்பதாலும், ஒப்பக் குழுவால் இவ்வொப்பம் பரிந்துரை செய்யப்பட்டது.

மேலும், இவ்வொப்பதாரரே தென் சென்னை மற்றும் வடசென்னை கொள்முதல் செய்யப்படும் காம்பெக்டருக்கான ( 40 மற்றும் 45) ஒப்பத்தில் குறைந்த விலை ஒப்பதாரராக இருப்பதால் ஒரே சமயம் அவரால் குறித்த நேரத்தில் 40 மற்றும் 45 காம்பெக்டர்களை வழங்க முடியுமா என்ற ஐயம் ஒப்பக்குழு அங்கத்தினர்களால் எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்து திருவாளர்க.ள் காம் அவிடா என்விரோ இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், தனது 12.11.2008 தேதியிட்ட கடித மூலம், தங்களின் நிதி மற்றும் தொழில் நுட்ப துறைகளின் திறன் தற்சமயம் மேம்படுத்தப்பட்டுள்ளதால், தங்களால் கண்டிப்பாக குறித்த நேரத்தில் அனைத்து காம்பெக்டர்களையும், வழங்க முடியும் என தெரிவித்துள்ளனர். ஆகவே, மேற்கூறியவற்றை கருத்தில் கொண்டு இவ்வொப்பத்தை பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகனப்பதிவு, காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறுவதற்கான செலவினை, ஒப்பதாரர் அளிக்கும் தக்க செலவு சீட்டுகளை ஏற்று, அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிப்பதாக ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, 45 எண்ணிக்கைகளில் 6 கன.மீ. கொள்ளளவு திறன்கொண்ட காம்பேக்டர், கேபின் மற்றும் Eicher கம்பெனி சேசிஸ் கொள்முதல் செய்ய ஆகும் மொத்த செலவான ரூ. 6,64,87,500/– ஐ திடக்கழிவு மேலாண்மைத் துறை மூலமாக JNNURM தொகையிலிருந்து வழங்கவும்; நான்கு வருடங்களுக்கான பராமரிப்பு செலவுத்தொகை (முதலாமாண்டு பராமரிப்பு செலவைத் தவிர்த்து) யான ரூ. 1,67,53,500/– ஐ, இயந்திர பொறியியல் துறையின் வடசென்னை மற்றும் தென்சென்னை வாகன பணிமனையின் கணக்கு எண்.209, இலகுரக வாகன பராமரிப்பு நிதி எனும் தலைப்பின் கீழ் வழங்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.

1. 45 எண்ணிக்கைகளில் 6 கன.மீ கொள்ளளவு திறன்கொண்ட Eicher 11.10 சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட காம்பெக்டர் உபகரணங்கள் மற்றும் 4 வருடங்களுக்கு ஆகும் பராமரிப்பு தொகையையும் சேர்த்து மொத்த தொகை ரூ.8,32,41,000/-க்கான திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், அதற்கான பணி ஆணை வழங்கவும்,

2. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகைக்கான வங்கி உத்தரவாதம் பெற்று உடன்படிக்கை செய்து கொள்ளவும்,

3. 45 எண்ணிக்கைகளில் 6 கன.மீ. கொள்ளளவு திறன்கொண்ட சிறிய காம்பேக்டர்களின் கொள்முதல் தொகையான ரூ.6,64,87,500/– ஐ JNNURM மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,

4. 4 வருடத்திற்கான பராமரிப்பு (முதலாமாண்டு பராமரிப்பு செலவைத் தவிர்த்து) தொகையான ரூ. 1,67,53,500/– ஐ இயந்திர பொறியியல் துறையின் வடசென்னை மற்றும் தென் சென்னை வாகன பணிமனையின் கணக்கு எண் 209, இலகுரக வாகன பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கவும்,

5. சேஸிஸ் தொகையின் 70 சதவிகிதத்தை ஒப்பதாரர் திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரால் சேசஸிஸ் உற்பத்தியாளரிடமிருந்து பெறப்பட்ட பொருள் விவர விலைப்பட்டியல் (Invoice) சமர்ப்பிக்கப்பட்டவுடன் ஒப்ப விதிகளின்படி முன்பணமாக வழங்கவும்,

6. மீதமுள்ள 30 சதவிகித சேஸிஸ் தொகை மற்றும் காம்பெக்டர்களுக்கான முழுத் தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 90 சதவிகிதம், வாகனம் கொள்முதல் செய்து ஆணையர் அவர்களின் பேரில் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கவும்,

7. காம்பெக்டர் உபகரணங்கள் பொருத்திய வாகனங்களின் திருப்திகரமான செயல்பாட்டைப் பொறுத்து, மீதமுள்ள காம்பெக்டர் உபகரணங்கள் பொருத்திய வாகனங்களுக்கான முழுத்தொகை ஆகிய கூட்டுத் தொகையில் 10 சதவிகிதம், வாகனம் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் வழங்கவும்,

8. இவ்வாகனங்களுக்கான நிரந்தர வாகன பதிவு , காப்பீடு மற்றும் தகுதி சான்றிதழ் பெறவதற்கான செலவினை தக்க செலவு சீட்டுகள் ஒப்பதாரர் திருவாளர்கள் காம்அவிடா இன்விரோ என்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அதனை ஏற்று அச்செலவிற்கான தொகையினை காசோலையாக அளிக்கவும் ( Actuals on production of necessary challans ),

மேற்கண்ட 1 முதல் 8 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.320 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

**“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.286/08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/2104/2007</u>
<u>ஆணையரின் 10.11.2008 நாளிட்ட குறிப்பு</u>

**<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :615/2008 பொருள் எண். **15**

**<u>ஜவஉறர்லால் நேரு தேசீய நகர புதுப்பித்தல் திட்டம் (JNNURM) மூலம் பாலங்கள் துறையின் மூன்று பணிகளுக்கு TNUDF நிறுவனத்தின் KFW fund மூலம் ஆண்டுக்கு 9.25 விழுக்காடு வட்டியில் ரூ.5243.77 லட்சம் கடன் பெறுதல்</u>**

மன்ற தீர்மான எண்.122/2007, நாள்:25.04.2007ன்படி, சென்னை மாநகராட்சி 2007–2008 நிதியாண்டில் கீழ்க்கண்ட துறைகளின் மூலதனப் பணிகளுக்கான திட்ட மதிப்பீட்டில் (ரூ.559.29 கோடி) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட (JNNURM) மான்யத்தின் மூலமாக திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு தொகையில் (ரூ.279.65 கோடி) மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டு, வரியில்லா கடன் பத்திரம் மூலம் குறைந்த வட்டியில் பத்தாண்டு கால தவணையில் திருப்பி செலுத்தும் வகையில் ரூ. 235.90 கோடி நிதி திரட்டியும் , ரூ.43.75 கோடி டுபிட்கோ பெருநகர திட்டத்தின் கீழ் நிதி பெறப்பட்டு செயல்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

| வ.எண். | துறைகள் | திட்ட மதிப்பீடு | JNNURM (திட்ட மதிப்பீட்டில் 50%) | TUFIDCO (திட்ட மதிப்பீட்டில் 25%) | Tax Free Bond |
|---|---|---|---|---|---|
| 1 | குடிசைப் பகுதி கான்கிரீட் சாலைகள் | 89.00 | 44.50 | | 44.50 |
| 2 | மழைநீர் வடிகால் | 50.29 | 25.15 | | 25.15 |
| 3 | பாலங்கள் | 175.00 | 87.50 | 43.75 | 43.75 |
| 4 | திடக் கழிவு மேலாண்மை | 245.00 | 122.50 | | 122.50 |
| | **மொத்தம்** | **559.29** | **279.65** | **43.75** | **235.90** |

**மன்ற தீர்மான எண்.258/2007, நாள்:28.05.2007** மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர புதுப்பித்தல் திட்டத்தில் மேற்கொள்ளும் கீழ்க்கண்ட பணிகளுக்கு மட்டும் திட்ட மதிப்பீட்டில் ரூ.33808.60 லட்சத்தில் (15 விழுக்காடு) ரூ.5071.29 லட்சம் வட்டியில்லா கடனாகவும் மற்றும் (35 விழுக்காடு) ரூ.11833.01 லட்சம் மான்யமாகவும் தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) வழியாக கடன் மற்றும் மான்யம் பெற ஒப்புதல் பெறப்பட்டது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | பணிகளின் பெயர் | திட்ட மதிப்பீடு | JNNURM (15%) வட்டியில்லா கடன் | JNNURM (35%) மான்யம் |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பூர் அருகே மேம்பாலம் கட்டும் பணி–(Scheme No.J0607-0011) | 3287.50 | 493.12 | 1150.63 |
| 2 | அடையாறு ஆற்றின் குறுக்கே ஆலந்துார் சாலையில் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி – (Scheme No.J0607-0012) | 548.30 | 82.25 | 191.90 |
| 3 | சென்னை நகரின் 6 இடங்களில் இரயில்வே சந்திக்கடவின் மேல்மட்ட பாலம் மற்றும் கீழ்மட்ட பாலம் அமைக்கும் பணி – (Scheme No.J0607-0013) | 4440.80 | 666.12 | 1554.28 |
| 4 | திடக்கழிவு மேம்பாட்டுப் பணிகள் – (Scheme No.J0607-0009) | 25532.00 | 3829.80 | 8936.20 |
| | மொத்தம் | 33808.60 | 5071.29 | 11833.01 |

மன்ற தீர்மான எண்.337/2007, நாள்:30.07.2007 மூலம் மேற்கண்ட JNNURM திட்ட பணிகளில் திட்ட மதிப்பீட்டில் (ரூ.33808.60 லட்சம்) எஞ்சிய 50 விழுக்காட்டில், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் **M.I.D.F.** நிதியின் கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.8452.15 லட்சம்** ஆண்டிற்கு **4 விழுக்காடு வட்டி** வீதத்தில் கடன் பெறுவதற்கும், டுபிட்கோ நிதி நிறுவனத்தின் சொந்த நிதியின் **(TUFIDCO-OWN FUND)** கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.8452.15 லட்சம்** ஆண்டிற்கு தோராயமாக **8.50 விழுக்காடு வட்டி** வீதத்தில் 15 ஆண்டு காலத்தில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் பெறுவதற்கும் ஒப்புதல் பெறப்பட்டது.

**நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/2104/2007**

மன்ற தீர்மான எண்.96/2008, நாள்:29.02.2008ன் வாயிலாக டுபிட்கோ நிதி நிறுவனத்தின் **M.I.D.F.** நிதியின் கீழ் கீழ்க்கண்ட பாலங்கள் துறையின் மூன்று பணிகளுக்கு மட்டும் (திடக்கழிவு மேலாண்மை துறை பணிகள் தவிர) திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு தொகை **ரூ.2069.16லட்சம்** ஆண்டிற்கு **4 விழுக்காடு வட்டி** வீதத்தில் கடன் ஒப்புதல் பெறப்பட்டது மன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | பணிகளின் பெயர் | திட்ட மதிப்பீடு | எம்.ஐ.டி.எப். கடன்(25%) |
|---|---|---|---|
| 1 | பெரம்பூர் அருகே மேம்பாலம் கட்டும் பணி | 3287.50 | 821.88 |
| 2 | அடையாறு ஆற்றின் குறுக்கே ஆலந்துார் சாலையில் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி | 548.30 | 137.08 |
| 3 | சென்னை நகரின் 6 இடங்களில் இரயில்வே சந்திக்கடவின் மேல்மட்ட பாலம் மற்றும் கீழ்மட்ட பாலம் அமைக்கும் பணி | 4440.80 | 1110.20 |
| | மொத்தம் | **8276.60** | **2069.16** |

மேற்குறிப்பிட்டவைகளின் தொடர்ச்சியாக, டுபிட்கோ நிதி நிறுவனத்தின் சொந்த நிதியின் **(TUFIDCO-OWN FUND)** கீழ் 25 விழுக்காடு தொகை **ரூ.2069.16 லட்சத்தினை** சென்னை மாநகராட்சிக்கு கடனாக அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் டுபிட்கோ நிதி நிறுவனத்திலிருந்து இதுவரை பெறப்படவில்லை. மேலும், தற்போது மேற்கண்ட மூன்று பணிகளுக்கு சந்தை விலைப் புள்ளிகள் உயர்ந்துள்ள காரணத்தினால் திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16251.00 லட்சத்திற்கு உயர்ந்துள்ளது.

எனவே, 12.06.2008 நாளிட்ட இவ்வலுவலக குறிப்பு ந.க.எண்.க(ம)மா–1/2480/2008ல் ஆணையர் அவர்களின் ஆணைப்படி, திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.16251.00 லட்சத்தில், ஏற்கெனவே JNNURM திட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்ட கடன் தொகை ரூ.1241.52 லட்சம் மற்றும் மான்ய தொகை ரூ.2896.84 லட்சம் மற்றும் திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16251.00 லட்சத்தில் 10 விழுக்காடு சென்னை மாநகராட்சி பங்காக ரூ.1625.10 லட்சம் போக எஞ்சிய ரூ.10487.54 லட்சத்தில் டுபிட்கோ **M.I.D.F.** நிதியின் மூலம் 50 விழுக்காடு ஆண்டிற்கு 4 விழுக்காடு வட்டியில் கடன் தொகை ரூ.5243.77 லட்சம் மற்றும் TNUDF-KFW FUND-லிருந்து ஆண்டுக்கு 9.25 விழுக்காடு வட்டியில் கடன் தொகை ரூ.5243.77 லட்சம் கடன் பெறுவதற்கு அந்நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

தற்போது TNUDF நிறுவனத்திடமிருந்து, அந்நிறுவனத்திற்கு சொந்தமான KFW FUND-லிருந்து 12 ஆண்டு காலம் திருப்பி செலுத்தும் வகையில் ஆண்டுக்கு 9.25 விழுக்காடு வட்டியில் ரூ.5243.77 லட்சம் கடனாக வழங்க ஒப்புதல் கடிதம் 29.09.2008 அன்று பெறப்பட்டுள்ளது.

எனவே, கீழ்க்காண்பவைகளுக்கு,

அ) மேற்கண்ட பாலங்கள் துறையின் மூன்று பணிகளுக்கு மட்டும் **TNUDF நிறுவனத்திடமிருந்து, அந்நிறுவனத்திற்கு சொந்தமான KFW FUND-லிருந்து ஆண்டுக்கு 9.25 விழுக்காடு வட்டியில் 12 ஆண்டு காலம் திருப்பி செலுத்தும் வகையில் ரூ.5243.77 லட்சம்** கடன் பெற அனுமதியும்

ஆ) திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.16251.00 லட்சத்தில் சென்னை மாநகராட்சி பங்கான 10 விழுக்காடு தொகையான ரூ.1625.10 லட்சம் சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியும்

மேற்கூறப்பட்ட இவ்வினங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.280 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.நி.பி.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18.　　　　மன்றச் செயலாளர்

**ம.அ.9.ந.க.எண்அ1/0383/08**
**ஆணையாளர் அவர்களின் 22.10.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :616/2008 பொருள் எண்:16

**வீடுகட்ட முன்பணம் பெறப்பட்ட மூலப்பத்திரம் திரும்ப வழங்கவும் ,**
**தவறுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை திரும்ப அளிக்கவும்.**

திருமதி. ஆர். சாந்தி இறந்த பணியாளரின் மனைவி 18.01.08ல் அளித்துள்ள மனுவில், மண்டலம்–9ல் துப்புரவு மேற்பார்வையாளராக பணியாற்றிய திரு. ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் மூலம் ரூ.1,75,000/– கடந்த 02.08.94ல் வழங்கப்பட்டது எனவும், அதற்கான அசல் பிடித்தம் செய்யப்பட்டு, வட்டி தொகை பிடித்தம் செய்யப்பட்டு வரும் பொழுது தனியர் 14.12.06 அன்று காலமானார் என்று தெரிவித்துள்ளார்.

அசல் தொகையை 134 தவணைகளுக்கு ரூ.1,74,200/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இறுதி தவணையான 135வது தவணைக்கு பிடித்தம் செய்ய வேண்டிய ரூ.800/– விடுபட்டுள்ளது. மேலும் வட்டித் தொகை ரூ.2235/– வீதம் நவம்பர்'05லிருந்து அக்டோபர் 2006 வரை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.(கூட்டுத் தொகை ரூ.26820/–மட்டும்).

தனியர் 14.12.06ல் காலமானதை தொடர்ந்து, தனியரின் வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி.ஆர்.சாந்தி என்பவருக்கு வழங்கப்பட்ட பணிக்கொடை தொகை ரூ.3,50,000/–ல் வீடுகட்டுவதற்கு முன்பண தொகைக்கான வட்டித் தொகையாக ரூ.1,07,438/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களை தொடர்ந்து 14.12.2006ல் காலமான திரு. ஆர். ராமசந்திரன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்டலம்–9ன் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. ஆர். சாந்தி அவர்களின் கோரிக்கையான வீடுவாங்க முன்பணம் பெற்றதற்கான வீட்டுப்பத்திரம் அடகுவைக்கப்பட்டுள்ளதை விடுவித்து ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மண்டல அலுவலர்–9 அவர்கள் தெரிவித்துள்ளது யாதெனில், இறந்துபோன பணியாளரின் வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. ஆர். சாந்தி அவர்களை மூல ஆவணங்களை உடனடியாக சமர்ப்பிக்க கோரி கடிதம் அனுப்பப்பட்டது அதன் அடிப்படையில் வாரிசுதாரரால் தற்போதுதான் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பின்வரும் விவரங்கள் தெரிவிக்கப்படுகிறது.

(அ) வீடுகட்டும் முன்பணத்திற்கான தனியர் வாங்கிய மூலப்பத்திரம் இணைக்கப்பட்டுள்ளது.

(ஆ) மூலப்பத்திரமே தற்போது தான் பெறப்பட்டதால் ஆணையர் பெயரில் ஒப்பந்தம் ஏதும் போடப்படவில்லை.

(இ) மூலப்பத்திரமே தற்போது தான் பெறப்பட்டதால் ஆணையர் பெயரில் அடமான பத்திரம் ஏதும் போடப்படவில்லை.

(ஈ) காப்பீடு செய்யப்பட்ட காப்பீட்டுப் பத்திரத்தின் நகலினை சமர்ப்பிக்கக் கோரி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) தனியரின் இறப்பு சான்றிதழ் மற்றும் சான்றொப்பம் பெற்ற வாரிசு சான்றிதழும் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியரின் குடும்ப ஓய்வூதிய கோப்பு தணிக்கைக்கு அனுப்பிய அப்போதைய இருக்கை எழுத்தர், தனியரின் கடைசி ஊதிய சான்றில் தனியரின் நிலுவைத் தொகை குறித்த விவரத்தில் வட்டித் தொகையினை குறிப்பிட்டதை தொடர்ந்து, தனியரின் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கொடையில் இத்தொகை தவறுதலாக பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களைத் தொடர்ந்து,

(2) தனியரின் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கொடையில் தவறுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.1,07,438/-ஐ வாரிசுதாரருக்கு திருப்பி வழங்கிடவும்.

(3) வாரிசுதாரர் கோரியுள்ளபடி மூலபத்திரத்தினை மனு தாரருக்கு திருப்பி அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளவும் மண்டல அலுவலர்-9 அவர்களின் 14.07.08 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மண்டல அலுவலர் குறிப்பின் அடிப்படையில், தனியரின் முழுகோப்பும், பணிப்பதிவேடும் ஆய்வு செய்யப்பட்டு, அன்னாருக்கு வழங்கப்பட்ட முன்பணம் அசல் மற்றும் வட்டி பிடித்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நிலுவை தொகையை பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளை பரிசீலித்து கீழே சமர்ப்பிக்கப்படுகிறது.

1) 05.08.1994ல் கட்டிய வீடு வாங்க வழங்கப்பட்ட முன்பணம் - ரூ. 1,75,000/-

2) அசல் பிடித்தம் செய்யப்பட்ட தொகை:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9/94 | to | 3/95 | = | 1300 x 7 | = ரூ. 9,100/- |
| 4/95 | to | 3/96 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/96 | to | 3/97 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/97 | to | 3/98 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/98 | to | 3/99 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/99 | to | 3/2000 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2000 | to | 3/2001 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2000 | to | 3/2001 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2001 | to | 3/2002 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2002 | to | 3/2003 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2003 | to | 3/2004 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2004 | to | 3/2005 | = | 1300x 12 | = ரூ.15,600/- |
| 4/2005 | to | 10/2005 | = | 1300x 7 | = ரூ. 9,100/- |
| 11/2005 | to | -- | = | 800x 1 | = ரூ. 800/- |
| | | | | மொத்தம் | = ரூ. 1,75,000/- |

3) 1994-95ஆம் நிதியாண்டிற்கு வட்டி 10,12 மற்றும் 13.5 சதவீதம் கணக்கிடப்பட்டது - ரூ.1,11,022/-

4) வட்டி பிடித்தம் செய்யப்பட்டது:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11/2005 | --- | | = | 1435 x 1 | =ரூ. 1435/- |
| 12/2005 | to | 3/2006 | = | 2235 x 4 | =ரூ. 8940/- |
| 4/2006 | to | 10/2006 | = | 2235 x 7 | =ரூ. 15645/- |
| | | | | மொத்தம் - | ரூ.26,020/- |

5) நிலுவையில் உள்ள வட்டி
(3) - (4) 1,11,022 - 26,020 - ரூ.85,002/-

தனியரின் ஊதியத்தில் வீடுகட்டும் முன்பணம் சிறப்பு குடும்பல நிதி திட்டதின் கீழ் ஒரு சதவிகிதம் கடந்த 9/94 முதல் 10/2006 வரை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் 12/2005 முதல் 10/2006 வரை குறைவாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை நிலுவையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

12/05 to 3/06 = 1 x 4 = 4
4/06 to 10/06 = 1 x 7 = 7

மொத்தம்-ரூ. 11

<u>ம.அ.9.ந.க.எண் அ1/0383/08</u>

இக்கோப்பின் மீது சமர்ப்பிப்பது யாதெனில், பணியிலிருக்கும் போதே காலமான திரு. ஆர். ராமச்சந்திரன், துப்புரவு மேற்பார்வையாளர், மண்டலம்–9 அவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகட்டும் முன்பணத்திற்கான நிலுவையில் உள்ள வட்டித்தொகை ரூ.85,002/– நேர் செய்தல் வேண்டும் அன்னாரின் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட வட்டித் தொகை ரூ.1,07,438/–ஐ திரும்ப வழங்க வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறது.

எனவே, மண்டலம்–9ல் துப்புரவு மேற்பார்வையாளராக பணியாற்றி, பணிக் காலத்திலேயே 14.12.2006ல் காலமான திரு. ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகட்டும் முன்பணங்களுக்கான அசல் மற்றும் வட்டிபிடித்தம் மேற்கொள்ளப்பட்டு வந்தநிலையில்,

1) நிலுவையில் உள்ள வட்டித் தொகை தவறுதலாக பிடித்தம் செய்யப்பட்டதை, அன்னாரின் வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி. ஆர். சாந்தி அவர்களுக்கு திரும்ப வழங்கவும்,

2) வீடுகட்டும் முன்பணத்திற்கான மூல ஆவணங்களை திரும்ப வழங்கவும் ,

3) தனியர் 14.12.2006ல் காலமானதற்கு அன்னாரின் ஊதியத்தில் 10/2006 வரை பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் போக நிலுவையில் உள்ள தொகைக்கு ரூ. 85, 002/– (ரூபாய் எண்பத்தைந்தாயிரத்து இரண்டு மட்டும்) நேர் செய்வதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.281 /08 , நாள்: 19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.ஆர்4/2249/2008
ஆணையாளர் அவர்களின் 11.11.2008 நாளிட்ட குறிப்பு

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :617/2008 பொருள் எண்.17

**சமுதாயக் கூடத்தில் பயன்படுத்த இயலாத பாத்திரங்களை கழிவு செய்து ஒப்பம்–ஏலம் மூலம் விற்பனை செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சி சமுதாயக் கூடத்தில் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு, மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள ஆறு வகையான பாத்திரங்களை கழிவு செய்து எடைக்கணக்கில் உள்ளது உள்ளபடி நிலையில் ஒப்பம் – ஏலம் கோரி விற்பனை செய்யும் பொருட்டு 09.06.2008 அன்று தொழில்நுட்ப குழுவினரால் நேரடி ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது. அதன்படி 19.09.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும், ஏலம் நடத்தவும் இறுதி தேதி அறுதியிடப்பட்டு, சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் 07.08.2008 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி பெறும் இறுதி நாளான 19.09.2008 அன்று எவரும் விலைப்புள்ளி அளிக்கவில்லை. ஏல நாளன்று பத்து ஏலதாரர்கள் கலந்துக் கொண்டு கோரிய விலைப்புள்ளிகள் ஏலக்குழு அங்கத்தினர்களால் குறிப்பிடப்பட்டு, அதில் உயர்ந்த விலை கோரிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எணி | பொருள் விவரம் | எடை (கிலோ) | தொழில்நுட்பக் குழு நிர்ணயித்த மதிப்பு (ரூ) | கோரிய உயர்ந்த விலை | ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01. | செம்பு பாத்திரம் | 317.000 | மொத்தம் 2,37,727/– | மொத்தம் 2,39,500 | திருவாளர்கள். எஸ்.பி. டிரேடர்ஸ் |
| 02. | பித்தளை பாத்திரம் | 697.300 | | | |
| 03. | அலுமினிய பாத்திரம் | 110.200 | | | |
| 04. | ஸ்டீல் பாத்திரம் | 115.850 | | | |
| 05. | இரும்பு பாத்திரம் | 580.100 | | | |
| 06. | மரசாமான்கள் | 45.000 | | | |

உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் செலுத்த வேண்டிய ஒப்ப வைப்புத் தொகை 20 % (ரூபாய்.48,000/–) வசூலிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துச் சீட்டு எண்.20914, 20915 மற்றும் 1 மூலம் 20.09.2008 அன்று செலுத்தப்பட்டது. பின்னடைந்த ஏலதாரர்கள் அனைவருக்கும் டேவணித் தொகை ஏலம் முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்பட்டு விட்டது.

எனவே,

1. சென்னை மாநகராட்சி வருவாய்த் துறை சமுதாயக் நலக்கூடத்தில் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்ட ஆறு வகையான பயனற்ற பாத்திரங்களை கழிவு செய்து எடைக்கணக்கில் உள்ளது உள்ளபடி நிலையில் ஒப்பம்–ஏலம் மூலம் விற்பனை செய்ய தொழில்நுட்பக் குழு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.2,37,727/–க்கு குறையாமல் ஏலத்தில் உயர்ந்த விலையான ரூ.2,39,500/– கோரிய ஏலதாரர் திருவாளர்கள். எஸ். பி. டிரேடர்ஸ் அவர்களுக்கு பாத்திரங்களை விற்பனை செய்யவும்,

2. மேற்சொன்ன அனைத்து பாத்திரங்களையும் எடைக்கணக்கில் (ஒரே தொகுப்பாக) விற்பனைசெய்யும் பொருட்டு, ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகை 20 % (ரூ.48,000/–) ஐ சரிகட்டி, மீதம் செலுத்த வேண்டிய விலைத் தொகையுடன் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமலில் உள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு) தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்ற பின் கொண்டு செல்ல அனுமதிக்கவும்,

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.283 /08 , நாள்:19.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.ஜெ.ந.வே.வா.தி.எண்.220–1/2008
ஆணையர் அவர்களின் 05.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :618/2008 பொருள் எண்.18

**சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதியம் பெறுபவர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலில் விடுபட்டவர்களை சேர்ப்பதற்கு அனுமதி வேண்டி.**

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எப்2/23777/07 நாள் 06.08.2008 மற்றும் 20.09.2008 மற்றும் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட வருவாய் சான்றிதழின்படி இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதியம் பெறும் 100912 நபர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலில் சேர்க்க மன்றத் தீர்மானம் எண்.597/2008ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எண். எப்2/23777/07 நாள்:03.11.2008ன் அடிப்படையில் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஒய்வூதியம் பெறுபவர்களில் விடுபட்ட நபர்களை கீழே குறிப்பிடும் பட்டியலில் கண்டுள்ளவாறு 8264 நபர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் பட்டியலில் சேர்த்து அது குறித்து சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வட்டாட்சியர் அலுவலகம் | புதிதாக அடையாளம் காணப்பட்டோர் (ஜூலை 2008 வரை) | வசிப்பிடத்தை மாற்றியவர்களின் எண்ணிக்கை | ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2008 மாதங்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் உதவித் தொகைப் பெற தகுதியுடையோர். |
|---|---|---|---|
| புரசைவாக்கம் – பெரம்பூர் | 1029 | 875 | 451 |
| கோட்டை தண்டையார் பேட்டை | 527 | 349 | 832 |
| எழும்பூர் – நுங்கம்பாக்கம் | 365 | 454 | 335 |
| மைலாப்பூர்– திருவல்லிக்கேணி | 1229 | 274 | 140 |
| மாம்பலம் – கிண்டி | 607 | 355 | 442 |
| | 3757 | 2307 | 2200 |
| மொத்தம் = 3757+2307+2200 = 8264 நபர்கள் | | | |

எனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள 8264 நபர்களை வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் சேர்க்க நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“10.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.85/2008 நாள்.10.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது..“

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.ஜெ.ந.வே.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.இ1/538/2008
ஆணையர் அவர்களின் 17.10.2008 நாளிட்ட குறிப்பு

# 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :619/2008 பொருள் எண்.19

மன்றத் தீர்மானத்தை ரத்து செய்து, திருத்திய தீர்மானம் வேண்டுதல்

திரு. எஸ். சுரேஷ்குமார், வார்டு–86ன் மாமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்)வின் தலைவர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட கடிதத்தில், அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்–சேய் நல மருத்துவமனையில் மகளிர் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் வந்து செல்லும் நிலையில், அவர்கள் இயற்கை உபாதைகளை கழிக்க கழிப்பிட வசதி இல்லாததாலும், மருத்துவமனையின் வெளியில் கழிப்பிடம் கட்ட போதிய இடவசதி இல்லையென்பதாலும், தனது 2007–2008 ஆம் ஆண்டு வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.10.00 லட்சத்தில் வார்டு–86ல் அமைந்துள்ள அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய் – சேய் நல மருத்துவமனையில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பொது கழிப்பிடம் ஒன்றை கட்ட நிதி ஒதுக்கீடு செய்யவிருப்பதாகவும், இப்பணியை சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள பொதுப்பணித்துறையிடமிருந்து உரிய தடையின்மைச் சான்றினை பெற நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அரசாணை எண்.221 , சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை 11.02.2008 தேதியிட்டதன்படி அரசு இவ்வினத்திற்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

1. மருத்துவமனை நடவடிக்கைகளுக்கு எவ்வித இடற்பாடும் ஏற்படாத இடத்தில் பொது கழிப்பிடத்தை அமைக்க வேண்டும்.
2. பொது கழிப்பிடம் கட்டும் பணியை பொதுப்பணித்துறை அல்லது அத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.
3. பொது கழிப்பிடம் மருத்துவமனை வளாகத்தில் கட்டப்படவிருப்பதால், அதனை சென்னை மாநகராட்சி நிதியில் சுகாதாரமான முறையில் பராமரித்தல் வேண்டும்.

இருப்பினும், ஆணையாளர் அவர்களின் 02.04.2008 நாளிட்ட குறிப்பில், பொது கழிப்பிடம் கட்டும் பணியை சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.206/2008, 03.05.2008 நாளிட்டதன்படி, திரு. எஸ். சுரேஷ்குமார், வார்டு–86ன் மாமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்)வின் தலைவர் அவர்களின் 2007–2008 ஆம் ஆண்டு வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.10.00 லட்சத்தில் வார்டு–86ல் அமைந்துள்ள அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்–சேய் நல மருத்துவமனையில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பொது கழிப்பிடம் ஒன்றை சென்னை மாநகராட்சி மூலம் கட்டி, பராமரிக்கவும், அரசு மருத்துவமனை வளாகத்தில் பொது கழிப்பிடம் கட்டும் பணியை மேற்கொள்ள பொதுப்பணித்துறையிடமிருந்து முன் நுழைவு அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

03.07.2008 தேதியிட்ட பொதுப்பணித்துறை, தலைமை பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் கடிதத்தில், அரசாணையின்படி மேற்குறிப்பிட்ட பணியானது பொதுப்பணித்துறை மூலமே மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

மேற்சொன்ன அரசாணையில், பொது கழிப்பிடம் கட்டும் பணியை பொதுப்பணித்துறை அல்லது அத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டுமென நிபந்தனை விதித்திருப்பதாலும், சென்னை மாநகராட்சி மூலம் பொது கழிப்பிடத்தை கட்ட பொதுப்பணித்துறை " தடையின்மைச் சான்று " வழங்காத நிலையிலும், 03.05.2008 தேதியிட்ட மன்றத் தீர்மான எண்.206/2008ஐ ரத்து செய்து, வார்டு–86ன் மாமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்)வின் தலைவர் அவர்களின் 2007–2008 ஆம் ஆண்டு வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.10.00 லட்சத்தில் வார்டு–86ல் அமைந்துள்ள அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்–சேய் நல மருத்துவமனையில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பொது கழிப்பிடம் ஒன்றை கட்ட இயக்குநர், அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்–சேய் நல மருத்துவமனை மூலமாக பொதுப்பணித் துறைக்கு ரூ.10.00 லட்சத்தை வழங்கவும், பொது கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் பயனீட்டுச் சான்றிதழ் பெறவும், மீதித் தொகை ஏதும் இருப்பின், அதனை திருப்பிச் செலுத்தக் கோரவும், பொதுக் கழிப்பிடத்தை சென்னை மாநகராட்சி நிதியில் சுகாதாரமான முறையில் பராமரிக்கவும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் திருத்திய அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.11.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 317 /08 , நாள்: 17.11.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் திருத்திய அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :620/2008 பொருள் எண்.20

**தானப்பத்திரம்**

மண்டலம்–10, வார்டு–154ல் திருவான்மியூர் கிராமம் புல எண்.126/4ல் அமையப் பெற்றுள்ள ஆனந்த் குடியிருப்பு வளாகத்தில் இருக்கும் சாலை, கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையில் இருந்து பிரிந்து முட்டுச் சாலையாக அமைந்துள்ளது. இச்சாலை இந்நாள் வரை தனியாரிடம் இருந்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. தற்பொழுது இந்த பகுதியின் உரிமையாளர் மற்றும் பொது அதிகாரம் பெற்றவருமான திரு.க. ஸ்ரீதரன் என்பவர் இச்சாலையை தானப்பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய முன் வந்துள்ளார். மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களின் கருத்திற்கிணங்க மனுதாரர் நிலத்தினை தானமாக கொடுக்க முன் வந்துள்ள நிலத்திற்கு பட்டா பெறுவதற்கு வட்டாட்சியர் அவர்களுக்கு 21.04.2006 அன்று கடிதம் அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது. வட்டாட்சியர் அவர்களது 29.05.2006 நாளிட்ட கடிதத்தில் திருவான்மியூர் கிராமம், பிளாக் எண்.23 நகர புல எண்.96 (பழைய புல எண்.26/4) சாலைப்பகுதி எனவும் சாலைப்பகுதிக்கு பட்டா வழங்க இயலாது எனவும் குறிப்பிட்டுள்ளார். மற்றும் உதவி ஆணையர் (ந.பு.நி.வ.) மயிலாப்பூர் அவர்கள் தமது கடிதத்தில் திருவான்மியூர் கிராமம் புல எண்.126/4ல் ஒரு பகுதி நிலம் கிரயம் செய்து கொடுக்கப்பட்ட பத்திர எண்.8309/01, நாள் 26.08.2001ன் படியும் அத்துடன் இணைக்கப்பட்ட வரைபடத்தின் படியும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது என்றும் மேற்படி நிலப்பகுதி தமிழ்நாடு நகர்புற (நி.வ.உ.மு.) சட்டம் 1978ன் கீழ் கையகப்படுத்தப்படவில்லை என்பதும் அவ்வலுவலக ஆவணங்களில் இருந்து தெரியவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டதில் இந்தச் சாலையின் அகலம் 33''0' ஆக மொத்த நீளத்திற்கும் அமையப்பெறாததால், மொத்த நீளத்திற்கும் 33'அடியாக அமைவதற்காக மனுதாரர் தமது பெயரில் பட்டா ஆகியுள்ள நிலப்பகுதிகளில் இருந்தும் தற்பொழுது சாலையாக பயன்படுத்தப்பட்டு வரும் நிலத்தையும் சேர்த்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய முன் வந்துள்ளார்.

மனுதாரர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட இருக்கும் நிலப்பகுதிகளின் விவரம் :

| வ. எண். | வரைபட குறிப்பீடு | நகர புல எண் | தற்போதைய பயன்பாடு | மாநகராட்சி ஒப்படைப்பு செய்யும் பகுதியின் அளவு |
|---|---|---|---|---|
| 1 | A | 96/1 பகுதி பிளாக் 23 | சாலையாக பயன் படும் புலம் | 2156.00 ச.மீ. |
| 2 | B | 96/2 பகுதி பிளாக் 23 | காலி மனை | 102.90 ச.மீ. |
| 3 | C & D | 96/2 பகுதி பிளாக் 23 | காலி மனை | 60.90 ச.மீ. |
| மொத்தம் | | | | 2319.80 ச.மீ. |

இப்பகுதியை மேம்படுத்த திறந்த வெளிக்கட்டணமாக ரூ.27,810/–யை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடம், 07.02.85 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், இச்சாலை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதற்காக சாலையின் மொத்த நீளமான 221.11மீ. சாலை அபிவிருத்தி கட்டணமாக தற்பொழுது அமுலில் இருக்கும் விலை விகிதப்படி ரூ.12,55,000/– செலுத்த தனியாருக்கு அறிவிப்பு (Payment Advice) 12.12.2007ல் வழங்கப்பட்டது. அதனையேற்று தோராய அபிவிருத்தி கட்டணமாக ரூ.12,55,000/–ஐ தனியர் சென்னை மாநகராட்சி செலுத்து சீட்டின் மூலம் இந்திய ஓவர்சீஸ் வங்கி, அடையார் கிளையில் 20.12.2007ல் ஆணையர் பெயரில் செலுத்தியுள்ளார்.

<u>ம.அ.10.ந.க.எண்.டி.பி.2264/2006.</u>

எனவே, தற்போது சாலையாக பயன்படுத்தப்பட்டு வரும் நகர புல எண்.96/1ல் உள்ள 2156 ச.மீ. நிலத்துக்கும் மேலும் மனுதாரருக்கு சொந்தமான புல எண்.96/2 மற்றும் 96/3 ஆகிய நிலங்களில் இருந்து மாநகராட்சிக்கு தானபப்த்திரத்தின் மூலம் தர இருக்கின்ற பகுதியான 163.80 ச.மீ. நிலத்துக்கும் மூலக் கோப்புகளின்படி ஸ்ரீதரன் என்பவரே உரிமையாளர் மற்றும் அதிகாரம் பெற்றவராக இருப்பதால் அவரிடம் இருந்து பட்டியலில் கண்ட புலப்பகுதியை தானபப்த்திரம் மூலம் மாநகராட்சி பெறுவதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிது.

“23.10.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.12/2008, நாள்: 23.10.2008-ன்படி இதனை நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்